விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 27 வியாழக்கிழமை (12.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

## உங்கள் பாதுகாப்பு உங்கள் கைகளில்

சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

03 ஆம் பக்கம் பார்க்க

எதிர்வரும் 10 நாட்களில்

## கொரோனா வைரஸ் தீவிரமாக பரவும்

15 ஆம் பக்கம் பார்க்க

நாட்டை உலுக்கும் கொரோனா

## மேலும் 124 பேர் உயிரிழப்பு

## +2,890 பேருக்கு தொற்று


3ஆவது நாளாகவும் சதத்தைக் கடந்த இறப்புக்கள்

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸால் மேலும் 124 பேர் உயிரிழந்துள்ளனர்.
நாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 124 கொரோனா மரணங்கள் பதிவானதாக சுகாதார சேவைகள் பணிப் 19

அரசியலிலிருந்து வெகுவிரைவில்

# ராஜபக்ஷக்கள் கூண்டோடு ஓரங்கட்டப்படுவார்கள்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்



(கொழும்பு)
அரசு தவறுகளை உடனடியாகத் திருத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் ராஜபக்ஷக்கள் அனைவரும் வெகுவிரைவில் அரசியலில் இருந்து மக்களால் ஓரங்கட்டப்படுவார்கள்.
இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.
(19ஆம் பக்கம் பார்க்க)

## அலங்கார கந்தனுக்கு

நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் அலங்காரக் கந்தனின் மகோற்சவம் நாளை கொடியேற் 19

வவுனியாவில்

## 19 வயது இளம் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் கிணற்றில் இருந்து 19 வயது இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட் 19

## வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கொரோனாவால் நேற்று மரணம்



(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா (வயது-76) கோவிட்-19 நோயினால் நேற்று முற்பகல் உயிரிழந்துள்ளார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உடல்நிலை பாதிக்கப்பட்ட அவருக்கு பொதுச் சுகாதார பரிசோதகரினால் முன்னெடுக்கப்பட்ட அன்டி 19

## கொடிகாமத்தில் விபத்து வயோதிபப் பெண் பலி

பரிசோதனையில் தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)
கொடிகாமத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண் உயிரிழந்த நிலையில் அவருக்கு கோவிட் -19 நோய்த்தொற்று 19

## வட மாகாண பிரதம செயலாளருக்கு தொற்று

அதிகாரிகள் பலர் தனிமைப்படுத்தப்படலாம்

(யாழ்ப்பாணம்)
வட மாகாண பிரதம செயலாளருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பிரதம செயலாளர் சமன் பந்துலசேன 19

கடந்த 24 மணி நேரத்தில்

## யாழில் கொரோனாவால் நான்கு பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 4 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.
யாழ்ப்பாணம் 19

கொரோனாவால்

## வவுனியாவில் தாய், சேய் மரணம்

(வவுனியா)
வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் கோவிட் தொற்று 19

அரசின் செயற்பாடுகள்

## மனிதாபிமானமற்றதாக மாறிவிட்டது – சஜித்

(கொழும்பு)
இலங்கை மிகவும் தீர்மான மிக்க நிலைமையை எதிர் நோக்கியுள்ள 19

## கொரோனா யாழ் - 97 வடக்கு - 164

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 97 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 164 19

கொரோனா அச்சுறுத்தல்

## யாழ்.பல்கலை ஊழியர்களை வீடுகளில் இருக்குமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
கொரோனாப் பரவல் அதிகரித்துவரும் நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கல்விசார் ஊழியர்களின் செயற்பாடு தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்த கலந்துரையாட 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. ந. துர்க்காதீபன் அவர்களின் துணைவி

## திருமதி சிவதர்மினி துர்க்காதீபன்



அவர்கள் காலமான செய்தியறிந்து
அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.
அவரின் மறைவினால் துயருற்றிருக்கும்
திரு. ந. துர்க்காதீபன் அவர்களுக்கும்
குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (7621)

ஆசிரியர் கழகம்
யா / மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை

# கண்டாவளையில் 9 பேருக்கு தொற்று

(கிளிநொச்சி) கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4, 5 வயது பெண் குழந்தைகளுடன் 4 சிறுவர்கள் உட்பட ஒன்பது பேருக்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. (ம-03)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
திரு. சி. ரவிச்சந்திரன் அவர்களின் அன்பு மாமனார்
அமரர்

## நாகலிங்கம் சண்முகலிங்கம்



தோற்றம் : 01.01.1936 மறைவு : 10.08.2021

அவர்கள் நேற்று முன்தினம் (10.08.2021)
செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (7622)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / நடராஜ இராமலிங்க வித்தியாலயம் - ஆவரங்கால்

# மரண அறிவித்தல்

## Dr. K. கதிர்காமசேகரன்

( MBBS, MRCP, MRCPsych, MFHom, DPM. Psychiatrist and Physician )



யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சிட்னி அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. K. கதிர்காமசேகரன் கடந்த 07.08.2021 (சனிக்கிழமை) அன்று சிட்னியில் காலமானார்.

அன்னார் கமலாவின் அன்புக் கணவரும் சாந்தி, நலி, கிருஷ்ணர் ஆகியோரின் அன்புத் தந்தையும் அசோக், லோகன், ஜனனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரன், ரோஷனா, ஆஷ்னா, சிதா, ராதா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, மயில்வாகனம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் (10.08.2021) செவ்வாய்க்கிழமை சிட்னியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2505)

கொழும்பு

தகவல்:-
சிவகுமார் நமசிவாயம்

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 14.07.2021 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தின் குலவிளக்கு
அமரர்

## பரமேஸ்வரி புண்ணியமூர்த்தி

[ ஓய்வுநிலை ஆசிரியை ]



மலர்வு : 24.05.1936
உதிர்வு : 14.07.2021

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.08.2021) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை மறுதினம் (14.08.2021) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (C-2508)

விநாயகர் வீதி, ஓடை, அல்வாய் தெற்கு, அல்வாய். குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## சக்தி தம்பு கணேசன்

பிறப்பு : 1946.05.22 இறப்பு : 09.08.2021

விடத்தல்தீவு. மன்னாரைப் பிறப்பிடமாகவும் லண்டன் Harrow-UK இனை வசிப்பிடமாகவும் கொண்ட அன்பிற்கும் மரியாதைக்குமுரிய அமரர் **சக்தி தம்பு கணேசன்** ( ஓய்வுநிலை விவசாய போதனாசிரியர் 1990 ஆம் ஆண்டு - மட்டக்களப்பு ) அவர்கள் எங்கள் எல்லோரையும் பெரும் துயரில் ஆழ்த்திவிட்டு அன்னையின் திருவடிகளில் சேர்ந்துவிட்டார்.

ஐயா அன்னையின் அருளாணைப்படி கிளிநொச்சி வழிபாட்டு மன்றத்தை ஆரம்பித்து ஒவ்வொரு கிராமங்கள்தோறும் அன்னையின் கூட்டு வழிபாடுகளை நடாத்தி அன்னை ஆதிபராசக்தியின் ஆன்மீகத்தை வளர்ப்பதில் அரும்பாடுபட்ட அன்னையின் ஆன்மீகத் தொண்டன். புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்தாலும் தன் இனத்தின்மீது அதீத பற்றுக்கொண்ட சமூக அறக் கொடையாளன், மனிதநேய செயற்பாட்டாளன், ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக **ஆதிபராசக்தி கல்வி சமூகநல அபிவிருத்தி மையம் – கிளிநொச்சி, இலங்கை** எனும் அற நிலையத்தை ஆரம்பித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு குறிப்பாக பெற்றோரை இழந்த சிறார்களின் கல்வி வளர்ச்சிப் பணிகளிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சுய தொழிலுக்கான உதவிகளையும் அன்னையின் ஆன்மீக வழியூடாக மன உறுதியோடு தனது இறுதிக் காலம் வரைக்கும் அரும்பணியாற்றிய உன்னத சேவையாளன். இன்று இவ்வுலகை விட்டு சென்றது எம் இனத்திற்கே பெரும் வெற்றிடத்தைத் தந்துள்ளது.

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் எமது நிர்வாகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னை ஆதிபராசக்தியின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

(C-2506)

தகவல் :
ஆதிபராசக்தி கல்வி சமூகநல அபிவிருத்தி மையம், கிளிநொச்சி - இலங்கை.
ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம், கிளிநொச்சி
அப்பாச்சாமி புஸ்பராசா குடும்பம் - கணேசபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களே!

# உங்களது பாதுகாப்பு உங்கள் கைகளில்

# மரணங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும்

## சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை



(கொழும்பு)

**இறுதி வாரத்தில் நாட்டில் 50 வீதத்தினால் அல்லது அதற்கு அதிகமான டெல்டா வைரஸ் பரவல் நிலை காணப்படுகிறது, டெல்டா வைரஸ் பரவல் வேகம் அதிகரித்துள்ள காரணத்தினால் மரணங்களும் அதிகரிக்க ஏதுவாக அமைந்துள்ளதாக சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

மரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்க கடினமான மாற்று நடவடிக்கைகளை கையாள வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாளாந்த கொவிட் மரணங்களின் அதிகரிப்பை அடுத்து சுகாதாரத் தரப்பினர் அடுத்த கட்டங்களில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில் இங்கிலாந்து தொற்றான அல்பா வைரஸ் தொற்றுப்பரவிய காலத்தில் எம்மால் நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடிந்தது. எனினும் தற்போது நாட்டில் டெல்டா வைரஸ் தொற்று பரவுகின்றது.

இதுவே கடந்த சில வாரங்களில் கொவிட் மரணங்களும், தொற்றாளர் எண்ணிக்கையும் அதிகரிக்க காரணமாகும்.

எதிர்காலத்தில் வேறு புதிய தொற்றுகள் ஏற்படலாம். எனவே முடிந்தளவு மக்கள் தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மிக இலகுவான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இந்தியாவின் நிலைமையோ அல்லது இந்தோனேசியாவின் நிலைமையோ இலங்கையில் காணப்படுவதாக கூற முடியாது.

இலங்கையிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் மறுக்கவில்லை, 50 வீதத்தினால் அல்லது அதற்கு அதிகமான வீத டெல்டா வைரஸ் பரவல் உள்ளது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

மிக வேகமான வைரஸ் தொற்றும் நிலையொன்றே காணப்படுகின்றது. இதே நிலைமை ஏனைய நாடுகளிலும் காணப்பட்டது.

இந்தியா, இந்தோனேசியா நாடுகளிலும் இதுவே நடந்தது. எனவே எமது நாட்டிலும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

மரணங்களைத் தடுக்க கடினமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது, தடுப்பூசிகளை ஏற்றுவதுடன் அதனையும் தாண்டி பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இப்போது வரையிலான தரவுகளில் 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களே அதிகளவில் மரணித்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலான நபர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகவே 60 வயதிற்கு மேற்பட்ட சகலரும் விரைவாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டவர்களில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு தடுப்பூசியை பெற்றுக்கொண்ட 170 இற்கும் அண்ணளவான நபர்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால் ஏனைய சகலருமே ஒரு தடுப்பூசியைக் கூட பெற்றுக்கொள்ளாதவர்கள் என அவர் தெரிவித்தார். (நி-5)

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொதுப்போக்குவரத்து சேவைகள்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ள நிலையில், பொதுப் போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, தனியார் துறை பேருந்துகள், அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் மாகாணங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகள் .40 வீதம் வரையில் குறைக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம், கடமைகளுக்காக செல்பவர்கள் மாத்திரம், மாகாணங்களுக்கு இடையிலான தொடரூந்து சேவைகளில் பயணிக்க முடியும் என தொடரூந்து திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (நி-5)

## சிறுவர்களுக்கான வீட்டு சிகிச்சை முறை ஆரம்பம் - மருத்துவர் தீபால் பெரேரா

(கொழும்பு)

கொரோனா தொற்றின் சிறிய அறிகுறிகள் தென்படும் 2 தொடக்கம் 14 வயது வரையிலான சிறுவர்களுக்கு நேற்று முதல் வீட்டு சிகிச்சை முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிறுவர்களுக்கு வீட்டில் சிகிச்சை அளிக்கும் போது, வயது வந்த ஒருவர் சிறுவர்களை கவனித்துக்கொள்ள எப்போதும் இருக்க வேண்டும் என்றும் தொலைபேசி மூலம் சிகிச்சை பரிந்துரைக்கப்படுவதால் தேவையான வசதிகளை வழங்க பராமரிப்பாளர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறுவர்களுக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிப்பது தொடர்பில் விசாரிக்க 1390 என்ற அவசர இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அவசியம் வைத்தியசாலைகளில் அனுமதிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தொற்றுக்குள்ளான 150 சிறுவர்கள், கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பருத்தித்துறையில் இரண்டு மதுபான சாலைகளுக்கு சீல்

(கரணவாய்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பருத்தித்துறை கிராமக் கோட்டு சந்தியில் உள்ள மதுபானசாலை மற்றும் ஆனை விழுந்தான் பகுதியில் உள்ள மதுபானசாலை என்பன பொதுச் சுகாதார பரிசோதகரால் நேற்று சீல் வைத்து மூடப்பட்டது.

கடந்த வாரம் ஆனைவிழுந்தான் மதுபான விற்பனை நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து விற்பனை நிலையத்தில் உள்ளோருக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் மற்றுமொருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

அத்துடன் கிராமக்கோட்டுப் பகுதியில் இயங்கும் மதுபான விற்பனை நிலையத்தில் பணிபுரியும் ஒருவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. மேலும் அந்த விற்பனை நிலையத்தின் உறவினர்கள் சிலர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டனர். (4-7-60)

## கொடிகாமத்தில் திருட்டு விசாரணை முன்னெடுப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று புதன்கிழமை அதிகாலை வேளையில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

தாயும், மகளும் தனித்திருந்த வீட்டிற்குள் முகமூடி அணிந்தவாறு நுழைந்த இருவர் அவர்களை மிரட்டி வீட்டில் இருந்த மூன்று பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர். குறித்த திருட்டு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரிஸ் செய்ன்ட் ஜெர்மெய்ன் கழகத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கு மெஸ்ஸி ஒப்பந்தம்

பெரிஸ் செய்ன்ட் ஜெர்மெய்ன் கழகத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தில் லியோனல் மெஸ்ஸிகையொப்பமிட்டுள்ளார்.

21 ஆண்டுகளின் பின்னர் பார்ஸிலோனா கால்பந்து கழகத்தில் இருந்து வெளியேறிய அவர் நேற்று முன்தினம் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் என பிரான்ஸ் கழகம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

மேலதிகமாக ஒரு ஆண்டுக்கான விருப்பத் தெரிவும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்ஸிலோனா கழகத்துக்காக 10 ஆம் இலக்க சீருடையுடன் விளையாடிய லியோனல் மெஸ்ஸி, பெரிஸ் செய்ன்ட் ஜெர்மெய்ன் கழகத்திற்காக 30 ஆம் இலக்க சீருடையுடன் விளையாட உள்ளார்.

இந்த ஒப்பந்தமானது, ஒரு பருவத்திற்கு 34.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற அடிப்படையில், 3 ஆண்டுகளுக்கு 104 மில்லியன் டொலர்கள் வேதனத்துடன் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-6)

# இந்தியா, இலங்கிலாந்து அணிக்கு அபராதம் விதித்தது ஐ.சி.சி.

நாட்டிங்காம் ட்ரெண்ட் பிரிட்ஜ் டெஸ்ட் போட்டியில் மெதுவாக பந்து வீசியதன் காரணமாக இரண்டு அணிகளுக்கும் அபராதம் விதித்துள்ளது ஐ.சி.சி.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்ட் நாட்டிங்காம் ட்ரெண்ட் பிரிட்ஜ் மைதானத்தில் கடந்த 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை நடைபெற்றது.

கடைசி நாள் ஆட்டம் முழுவதும் மழையால் பாதிக்கப்பட்டதால், இந்தியாவின் வெற்றி வாய்ப்பு நழுவிப் போனதுடன் போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்த நிலையில் இரண்டு அணிகளும் குறிப்பிட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட ஓவர்களை வீசி முடிக்காமல் இருந்தது தெரிய வந்தது. இதனால் இரண்டு அணி வீரர்களுக்கும் தலா 40 சதவீதம் (சம்பளத்தில் இருந்து) அபராதம் விதித்த ஐ.சி.சி, சம்பியன்ஸ்ஷாபி தொடருக்கான புள்ளிகளில் இரண்டை குறைத்துள்ளது. (4-6)

# உலகின் சிறந்த பந்து வீச்சாளர் பும்ரா



இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பும்ரா தனது பந்து வீச்சில் பல்வேறு மாறுபாடுகளை வெளிப்படுத்துகிறார் என இங்கிலாந்து வீரர் ஜானி பேர்ஸ்டோ பாராட்டி உள்ளார்.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ராவிடம் அற்புதமான திறமைகள் உள்ளன. அவர் உலகத்தரம் வாய்ந்த பந்து வீச்சாளர். அனைத்து வடிவ கிரிக்கெட்டிலும் அவர் சிறப்பாக உள்ளார்.

ஐ.பி.எல்., இந்தியாவுக்கான ஒருநாள் போட்டி, 20 ஓவர் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அவரை பார்த்து வருகிறோம். அனைத்திலும் சிறப்பாக பந்து வீசுகிறார். அவர் தனது பந்து வீச்சில் பல்வேறு மாறுபாடுகளை வெளிப்படுத்துகிறார் என தெரிவித்தார். (4-6)

# இந்தியா - இங்கிலாந்து 2 ஆவது டெஸ்ட் இன்று






இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்த நிலையில், இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெறும் முனைப்பில் இரு அணிகளும் தயாராகி வருகின்றன.

விராட்ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளும் 5 ஆட்டம் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதி வருகின்றன.

நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்ட் போட்டி சமனிலை ஆனது. இப்போட்டியில் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. ஆனால் கடைசி நாள் ஆட்டம் மழை காரணமாக ஒரு பந்து கூட வீசாமல் இரத்து செய்யப்பட்டது. இதனால் இந்திய அணிக்கு ஏமாற்றம் ஏற்பட்டது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி இன்று லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் தொடங்குகிறது.

இப்போட்டி மாலை 3.30 மணிக்கு தொடங்கும். வேகப் பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட், பயிற்சியின் போது காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் அவர் இன்றைய டெஸ்டில் விளையாடுவது சந்தேகம். இதற்கிடையே 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் ஆல்-ரவுண்டர் மொய்ன் அலி சேர்க்கப்பட்டுள்ளார். (4-6)

# பயிற்சியாளர் பதவியிலிருந்து ரவிசாஸ்திரி விலக முடிவு



இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து ரவிசாஸ்திரி விலக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஹோலி தலைமையிலான இந்திய அணி, தற்போது இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு. அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்நிலையில், இந்திய அணியின் தலைமை பயிற்சியாளரான ரவிசாஸ்திரி வரும் இருபது-20 உலகக்கிண்ணத் தொடருக்கு பின், பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவர் மட்டுமின்றி இந்திய அணியின் பவுலிங் பயிற்சியாளர் பாரத் அருண், பீல்டிங் பயிற்சியாளர் ஆர்.ஸ்ரீதர், பட்டிங் பயிற்சியாளர் விக்ரம் ரத்தோர் ஆகியோரும் விலகவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதற்காக ரவிசாஸ்திரியிடம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பி.சி.சி.ஐ. நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரவிசாஸ்திரி தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகினால், அடுத்து இந்திய அணியின் முன்னாள் வீரர் ராகுல் ட்ராவிட் நியமிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. (4-6)

# லங்கா பிறீமியர் லீக் டிசெம்பரில் நடத்த திட்டம்

லங்கா பிறீமியர் லீக் 2 ஆவது சீசன் டிசெம்பர் 3 ஆம் திகதி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் - டிசெம்பர் காலகட்டத்தில் முதல் சீசன் நடத்தப்பட்டது.

இந்நிலையில் லங்கா பிறீமியர் லீக் 2 ஆவது சீசன் இந்தாண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவலானது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த கிரிக்கெட் தொடரை அம்பாந்தோட்டையில் உள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த லங்கா பிறீமியர் லீக் சீசனில் ஜஃப்னா ஸ்டாலியன்ஸ் அணி கிண்ணம் வென்றது குறிப்பிடத்தக்கது. (4-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக அடையாள அட்டை இல்லாதவர்கள்

# புகையிரதத்தில் பயணிக்க அனுமதி மறுப்பு

(கொழும்பு)

**அலுவலக அடையாள அட்டை அல்லது உரிய ஆவணங்கள் இல்லாதவர்கள் மாகாணங்களுக்கு இடையேயான ரயில் சேவைகளைப் பயன்படுத்த முடியாது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.**

குறித்த ஆவணங்களை எந்த நேரத்திலும் பரிசோதனை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வே ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும்வேலைக்கு செல்வோருக்கான ரயில் பயணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ரெபிட் அன்டிஜன் பரிசோதனை


(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாட் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு எழுமாற்றமாக ரெபிட் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன.

இந்த பரிசோதனைகள், எதிர்வரும் 17ஆம் திகதியன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரையிலும் முன்னெடுக்கப்படும் என படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அதிகாரிகளை இந்த பரிசோதனைகளுக்கு உட்படுத்துமாறு சுகாதாரத் துறையினர் பரிந்துரைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற பிரதானிகளுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற பணியாட் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் உடல் நலத்தை உறுதி செய்யும் நோக்கில் இந்த பரிசோ தனைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இது, பாராளுமன்ற வளாகத்தில் சுகாதார அமைச்சினால் நடத்தப்படவுள்ள ஆறாவது சுற்று கொரோனா பரிசோதனை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)



இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தீ தான் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று சந்தித்தார். இச்சந்திப்பில் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# உடனடியாக ஊரடங்கை அமுல்படுத்தினால் 1200 பேரைக் காப்பாற்றலாம்

## பேராசிரியர் சுனேத் அகம்பொடி அவசர கோரிக்கை

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தினால் எதிர்வரும் 20 நாட்களில் ஏற்படக்கூடிய ஆயிரத்து 200 மரணங்களை தவிர்க்க முடியும் என ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுனேத் அகம்பொடி தெரிவித்தார்.

இலங்கையில் கொவிட் புள்ளிவிபரத் தரவுகளின் அடிப்படையில் இந்த விடயத்தை எதிர்வு கூற முடிகின்றது எனவும் தனது டுவிட்டர் பக்கத்திலேயே அவர் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது,

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் தீர்மானம் 5 நாட்கள் பின்தள்ளப்பட்டால் 700 மரணங்களுக்கு அது ஏதுவாக அமையக் கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு வாரங்களில் நாளாந்த மரண எண்ணிக்கை 150 ஆக உயர்வடையும் எனவும் அவர் கடந்த 7ஆம் திகதி எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## தனியார் சுகாதாரத் துறையில் கொவிட் பரிசோதனைக்கான கட்டணம் நிர்ணயம்

(கொழும்பு)

தனியார் சுகாதாரத் துறையில் பி.சி.ஆர். மற்றும் ஆன்டிஜென் சோதனைகளை மேற்கொள் வதற்கான கட்டணங்கள் சுகாதார அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பி.சி.ஆர். சோதனைகளுக்கு 6 ஆயிரத்து 500 ரூபாயும், ஆன்டிஜென் சோதனைகளுக்கு 2 ஆயிரம் ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என்று சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. (நி-5)

# துயர் பகிர்கின்றோம்

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 1945 | 2021 |
| 03 | 08 |
| 17 | 11 |



## அமரர். கோணலிங்கம் கருணானந்தராசா

(கௌரவ தவிசாளர், வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்)

பெயருக்கேற்றாற்போல்- கருணை
உள்ளம் கொண்ட ராசாவே
வல்வெட்டியின் விடிவெள்ளியே
உடல் தளர்ந்த போதும்- மனம்
தளராது வல்வெட்டித்துறைக்காய் உழைத்தவரே
நேர்மையின் வழி நீர் சென்றீர் என
உம்மோடு பணியாற்றியோர் உரைப்பர்
அடுத்தவர் மனம் நோகாதது உம்
பேச்சுக்கள் என உற்றவர்கள் உரைப்பர்
உம் வழிகாட்டலில் நகர சபை சென்றது வெகுதூரம்
இன்று திக்கறியாது நிற்கிறது
வழிகாட்ட வருவீரோ தவிசாளரே...?
உம் மனைதனில் உம் மனையாள்
உமக்காக காத்து நிற்பாளே! என் சொல்லி
தேற்றுவோம் அம்மணியை நாம்..
உருவத்தால் மென்மையாய் இருந்தபோதும்
உம் முடிவுகள் இறுக்கமானவை தலைவரே
சொல்லி மாளாது உம் பிரிவின் துயர்தனை
சொல்லும்படி செய்வோம்- நீர்
விட்டுச்சென்ற செயல்தனை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-2504)

**நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை**

# மரண அறிவித்தல்

## திரு. மரியாம்பிள்ளை யோசப் தேவதாஸ் (சந்திரன்)

ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர்-யாழ். மத்திய கல்லூரி)



சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி , யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு.மரியாம்பிள்ளை யோசப் தேவதாஸ் ( சந்திரன்) 11.08.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ம.யோ. அரசரட்ணம் -ஞானப்பு அரசரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை -லூட்ஸ் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி .திரேசம்மா (சறோ)(கரம்பொன்) வின் அன்புக் கணவரும் , இ.டனியலா துஸ்யந்தி , அ.ஜெ. கீதாஞ்சலி ஆகியோரின் அன்புத் தகப்பனும் , இளங்கோ ராஜசேகரன் , அன்ரன் ஜெயறாஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும்அ.ஜெ.கிறிஸ்ரிகா, இ.ஜொயானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலம்சென்ற அமலதாஸ், ஜேசுதாஸ்( மனோகரன்), காலஞ்சென்ற மேரி பற்றிமா , மேரி யசிந்தா (சறோ), மேரி கலிஸ்ரா (றோகினி) , வேனிற்றா (சாந்தி) , கிறிஸ்ரி யோதாஸ் , லிசி நோயலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் , சேவியர் , காலஞ்சென்ற டெய்சி அன்னமலர் , Dr.ஜேசுதாசன் , ம.கொன்சால்வே (பாலன்), மரிய ராஜேஸ்வரி, றெஜி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 12.08.2021 வியாழக்கிழமை மாலை 2.30 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் இடம்பெற்று, யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் , உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**43, சோமசுந்தரம் அவெனியூ,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.** (7620)

**தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவை காரணம் காட்டி மதங்களை வஞ்சிக்காதீர்கள்

## அங்கஜன் எம்.பி. காட்டம்

(சாவகச்சேரி)

**கொரோனாவைக் காரணம் காட்டி மதங்களை வஞ்சிக்காதீர்கள். அது சமூகத்தில் கொரோனாவை விடப் பாரிய விளைவுகளை ஏற்படுத்திவிடும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**



நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். எமது மதம் எமக்கு எவ்வளவு முக்கியமோ அதுபோன்றே மற்றவர்களுக்கும் அவரவர் மதம் முக்கியமானதாக இருக்கும்.

அந்த மதத்தை கேள்விக்கு உட்படுத்தும் அல்லது அவமதிக்கும் சம்பவம் ஏதேனும் இடம் பெற்றால் அந்த மக்களால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறே அண்மையில் மிருசுவில் பகுதியில் இந்து ஆலயம் ஒன்று இடிக்கப்பட்ட போது இந்து மக்கள் கொதித்தெழுந்தனர்.

தற்போது வடமராட்சி செல்வச்சந்நிதி ஆலய அன்னதான மடம் சுகாதாரப் பகுதியினரால் மூடப்பட்ட சம்பவத்தையும் தமது மதத்திற்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதி என்றே இந்து மக்கள் எண்ணுகின்றனர்.

அன்னதானக் கந்தன் என வரலாற்றில் இடம்பிடித்து பல ஏழைகளின் பசி போக்குகின்ற மடத்தினை மூடுவதென்பது பல ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடாகவே எண்ணத் தோன்றுகிறது. தற்போது கொரோனா அபாய காலகட்டத்தில் சுகாதாரப் பகுதியினர் தமது உயிரை துச்சமென நினைத்து சேவையாற்றுகின்றனர். அந்த அர்ப்பணிப்பிற்கு முதலில் தலைவணங்குகிறோம்.

ஆனால் மறுபுறம் ஒருசிலர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதால் அந்த ஒட்டுமொத்த அர்ப்பணிப்பும் வீணாகிப் போகின்றது. கொரோனாவைக் காரணம் காட்டி அதிகாரத்தைப் பயன்படுத்தி மதங்களை வஞ்சிக்காதீர்கள். அது சமூகத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தி அமைதியின்மையைத் தோற்றுவிக்கும். சட்டத்தை ஏற்றத்தாழ்வுகள் இன்றி அனைவருக்கும் சமமாக பிரயோகிக்கவும் ஒரு பகுதியினர் மீது சட்ட அதிகாரத்தை அதிகமாகப் பயன்படுத்துவதும், இன்னொரு பகுதியினரின் தவறை கண்டும் காணாமலும் விட்டுச் செல்வதும் அதிகாரத் துஷ்பிரயோகமே என மேலும் தெரிவித்தார். (4-7-30)

# வடமராட்சியில் கொவிட் தீவிரம் பலருக்கு பரவியிருக்கலாம்!

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் நெல்லியடி இலங்கை வங்கி, பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி, நெல்லியடி பாற்சாலை, நெல்லியடி யாழ்ப்பாணம் வீதியில் அமைந்துள்ள நகைக் கடை என பலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி இலங்கை வங்கியில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று அதன் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதோடு அவருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டு இன்றையதினம் வேறு ஊழியர்களுடன் இலங்கை வங்கி இயங்கவுள்ளது.

அதேபோல் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து அதன் செயற்பாடுகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-7-60)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ப.ஜெயகுமாரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7)

# கொரோனா தடுப்பூசிக்கான இறுதி சந்தர்ப்பம்

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இறுதிக்கட்ட 1 ஆவது தடுப்பூசி ஏற்றும் நிகழ்வானது இன்று வியாழக்கிழமை முதல் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் காலை 8.30 முதல் மாலை 3.30 வரை நடைபெறும்.

மேலும் ஒரு மாதத்திற்கு முன்னர் 1 வது தடுப்பூசி ஏற்றி 2 ஆவது தடுப்பூசி ஏற்றத் தவறியவர்களுக்கான 2 ஆவது தடுப்பூசி ஏற்றும் நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம் பெறும்.

பொதுமக்கள் அனைவரும் தவறாது இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி தடுப்பூசியை பெறுமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (4-7-60)


# பைஸர் தடுப்பூசி இன்மையால் வெளிநாடுகளுக்கு செல்வோர் காத்திருப்பு

(சாவகச்சேரி)

பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறாமையால் வெளிநாடுகளுக்கு செல்லக் காத்திருப்போர் சிக்கல்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில வெளிநாட்டு தூதரகங்கள் பைஸர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களது விண்ணப்பங்களை நிராகரிப்பதாக தெரிவிக்கிறது.

தற்போது வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் மாத்திரமே குறிப்பிட்டளவானோருக்கு பைஸர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய மாவட்டங்களுக்கும் பைஸர் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுக்க வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளிநாடுகளுக்கு செல்லக் காத்திருப்போர் கேட்டுக் கொண்டுள்ளனர். சகல மாவட்டங்களுக்கும் குறிப்பிட்டளவு பைஸர் தடுப் பூசிகளை வழங்கி வைக்கும் பட்சத்தில் வெளிநாடு செல்லக் காத்திருப்போர் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடாது என மேலும்தெரிவித்தனர்(4-7-30-60)



யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை மாணவர்களின் இணைய வழிக் கற்கைக்கு டயலொக் நிறுவனம் இலவச சிம் அட்டை மற்றும் அதனோடு இணைந்த மாதாந்தம் 10 ஜீ.பி.பெறுமதியில் மூன்று மாதங்களுக்கு இலவச பக்கேஜ் ஆகியன வழங்கி வைத்துள்ளது. குறித்த உதவியை டயலொக் நிறுவனம் தென்மராட்சியில் பின்தங்கிய நிலையில் உள்ள 23 பாட சாலைகளுக்கு வழங்கி வைத்துள்ளது. (படம்- சுபேசன்)

# ஊழியருக்குத் தொற்று முடக்கப்பட்டது வங்கி

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டமையால் அந்தக் கிளையில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் வங்கியின் பருத்தித்துறை கிளை மாற்று நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மூடுமாறு சுகாதார மருத்துவ அதிகாரியினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வங்கியில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களையும் 14 நாட்களுக்கு சுயதனிமைப் படுத்த சுகாதார மருத்துவ அதிகாரியினால் அறிவுறுத்தப்பட்டது. (4-7-33-60)

# இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 6 நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம்76310315979 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு அரசாங்கமும் தமிழர் பிரச்சினையில் இதயசுத்தியுடன் செயற்படவில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன்

(ஹற்றன்)

**எந்த ஒரு பெரும்பான்மை அரசாங்கமும் இதய சுத்தியுடன் தமிழர்கள் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டவில்லை. எனவே அந்த நிலைதான் இந்த அரசாங்கத்திலும் தமிழர்களுக்கு நடக்கும். இந்த அரசாங்கம் தமிழர் பிரச்சினையை தீர்த்து வைக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.**



நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்த கொண்டு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தை வெற்றிகொண்டு பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை கொண்டிருந்த பிரதமர் மகிந்த தமிழர்களின் நிலைமையை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தி தீர்வைப் பெற்றுக் கொடுத்திருந்தால் நிச்சயமாக சிங்கள மக்கள எதிர்த்திருக்க மாட்டார்கள். ஆனால் அவர் அதனை செய்யவி ல்லை. காரணம் தனது செல் வாக்கு சரிந்துவிடும் என்ற பயமே.

ஆனால் இன்று பதவி நிலை மாற்றமடைந்துள்ளதே தவிர ஆட்கள் மாற்றமடையவில்லை. எனவே அதே மனநிலை அதே நிலைப்பாடு அதே குழு இவர்களால் எப்படி தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். இது இன்னும் ஒரு கண்துடைப்பாகவே இருக்கும் என நான் கருதுகின்றேன்.

இதுவரை கடந்த 30 வருடங்களாக ஆட்சி செய்த எந்த ஒரு அரசாங்கமும் தமிழர் தரப்பு விடயங்களை இதய சுத்தியுடன் அணுகவில்லை என்பதே கசப்பான உண்மை.

ஆனால் இந்த அரசாங்கம் நினைத்தால் இந்த தமிழர் பிரச்சினைக்கு சரியான தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும். காரணம் பெரும்பான்மை பலம் முக்கிய பதவிகளில் உள்ள அனைவரும் ஒரே குடும்ப அங்கத்தவர்கள். ஆனால் அதனை செய்வார்களா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா: **48 ½**செவ் 7 சூரி10 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்: வாகன உரிமையாளர்
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: **B/2925**

பிறப்பு:1972 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: **40 ¼** செவ் 9 சூரி8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:தனியார்கம்பனிவேலை
எதிர்பார்ப்பு:மணமகன் விவாகரத்தானவர்
தொ.இ: **B/2966**

பிறப்பு:1980இந்து நட்சத்திரம்:சித்திரை
கி.பா:16 செவ் 6 சூரி5 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: டுபாயில் இருந்து வந்து இருக்கிறார்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: **B/2980**

பிறப்பு:1979 இந்து நட்சத்திரம்: மூலம்
கி.பா: 60 செவ் 5சூரி6இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc, தனியார்கடை, **U.K**
எதிர்பார்ப்பு:லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மன் மட்டும்
தொ.இ: **B/2985**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: **31 ½**செவ் 10சூரி11 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:. விவசாயம்
எதிர்பார்ப்பு:மணமகள் விவாகரத்தானவர்
தொ.இ:**G/6783**

பிறப்பு:1983 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா:-செவ்,சூரி2 இல்
உயரம்:**148cm**
தகைமை/தொழில்:தனியார் வைத்திய சாலை தாதி
எதிர்பார்ப்பு:சொந்தத்தொழில்
தொ.இ:**G/6792**

பிறப்பு:1986இந்து நட்சத்திரம்: மகம்
கி.பா:62செவ்9 சூரி1 இல்
தகைமை/தொழில்:**HND**
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ:**G/6797**

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்:புனர்பூசம்
கி.பா:- செவ்,சூரி 2இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: **IT Degree,CIMA, Canada Not PR**
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடுபட்டதாரி
தொ.இ:**G/6826**

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# பிளாஸ்ரிக் கழிவுகளை விற்று வகுப்பறை கட்ட நன்கொடை

(கொழும்பு)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வசித்துவரும் 16 வயது பாடசாலை மாணவி நீர்கொழும்பு மகளிர் ஜூனியர் பாடசாலைக்கு வகுப்பறை அமைக்க முன்வந்துள்ளார்.

இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த கைலி குரூஸ் என்ற குறித்த மாணவி, ஒரு வசதியான வகுப்பறை அமைக்க ஒரு மில்லியன் ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்.

அந்த மாணவி தனது ஓய்வு நேரத்தில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகளை விற்று பணம் சேகரித்து அந்த நிதியை இலங்கையில் வகுப்பறை அமைக்க உதவியுள்ளார்.

நேற்று முன்தினம் 10 ஆம் திகதி அதிகாரபூர்வமாக பணத்தை ஒப்படைத்தார். (நி-5)

# சீனத் தடுப்பூசி பெற்றால் பிரான்ஸிற்குள் நுழைய முடியாது




(கொழும்பு)

சீனாவின் சினோபார்ம் தடுப்பூசி பெற்ற இலங்கையர்களுக்கு பிரான்ஸ் வர தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பைசர், மொடர்னா, அஸ்ட்ரா ஜெனேகா, கோவ்ஷீல்ட் மற்றும் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் ஆகிய தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்கள் மாத்திரம் பிரான்ஸிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என்று கொழும்பிலுள்ள பிரெஞ்சு தூதரகம் அறிவித் துள்ளது.

இந்த பட்டியலில் சீனாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)


### மணமகன் தேவை

1975. இந்து புனர்பூசம். **Bank Assistant Manager.** பதிவு:4216. பதிவுக்கான 15% கழிவு **12 August 2021** வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. பதிவு செய்ய **www. EQ Marriage Service. Com/create-profile** இற்கு செல்லுங்கள். **www. EQ marriage Service.com, Ensured Quality Lanka Colombo-04, tel :0766649401** (C-1466)

### மணமகள் தேவை

1981. இந்து. சித்திரை. System Administrator, Landon (சொந்த இடம் :வடலியடைப்பு) பதிவு:6210. பதிவுக்கான 15% கழிவு **12 August 2021** வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. பதிவு செய்ய **www. EQ Marriage Service. Com/create-profile** இற்கு செல்லுங்கள். **www. EQ marriageService.com, Ensured Quality Lanka Colombo-04, tel :0766649401** (C-1466)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா சூழல் மாணவர்களின் கல்வியினைப் பாதித்துள்ளது

## முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர்

(அக்கராயன்)

**நிகழ்நிலை வகுப்புகளினால் மாணவர்கள் முழுமையான கல்வியினை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் முல்லைத்தீவில் இல்லை என முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் நிலவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கல்வி, பிற பாட விதானச் செயற்பாடுகளில் கடந்த காலங்களில் நல்ல பெறுபேறுகளை முல்லைத்தீவு கல்வி வலயம் வெளிப்படுத்தியது.

கொரோனா அச்சுறுத்தலுக்குப் பின்னர் பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் தற்போது நிகழ்நிலை வகுப்புகளில் கல்வி கற்று வருகின்றனர்.

எமது வலயத்தில் 40 வீதமான மாணவர்களுக்குத்தான் நிகழ்நிலை வகுப்புகளில் கற்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

ஏனைய மாணவர்களுக்கு நிகழ்நிலை வகுப்புகளில் பங்கு கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

இது ஒரு பாதிப்பினையே கல்வி கற்றலில் மாணவர்களிடையே ஏற்படுத்தி உள்ளது. எனவே தற்போதைய சூழல் மாறும் போதுதான் மாணவர்கள் எல்லோரும் ஒரே நிலையில் கல்வி கற்கக் கூடிய வாய்ப்புகள் உருவாகும் எனவும் தெரிவித்தார். (7-4-6-350)

# வீடொன்றில் புகுந்து இளைஞர்குழு அட்டகாசம்



(குருமன்காடு)

வவுனியா, தோணிக்கல், பொதுக்கிணறு வீதிக்கு அருகாமையில் உள்ள பூட்டியிருந்த வீடு ஒன்றிற்குள் நேற்று முன்தினம் மாலை நேரத்தில் புகுந்த இளைஞர் குழு அங்கிருந்த கதிரை, மேசைகள் உள்ளிட்ட வீட்டு தளபாடங்களை உடைத்து சேதப்படுத்தியதுடன், கதவினையும் உடைக்க முயன்றுள்ளனர்.

வெளியில் சென்ற வீட்டு உரிமையாளர்கள் வீட்டிற்கு வந்த போது குறித்த இளைஞர் குழு வீட்டில் நின்றதுடன், வீட்டு உரிமையாளருக்கும் அச்சுறுத்தல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-4-6-250)

# வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் வீதியின் இருபுறமும் துப்புரவுப்பணி

### கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் மாத்தளன் சந்தியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் செல்லும் வீதியின் இரு புறமும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மாத்தளன் புதுக்குடியிருப்பு பிரதான வீதியின் இருமருங்கிலும் மரங்கள் வளர்ந்து காணப்பட்டதாலும் பாரிய வீதி விபத்துக்கள் இடம்பெற்றதாலும் கால்நடைகளின் நட மாட்டத்தினாலும் பயணிகள் அசௌகரியத்திற்குள்ளானதால் குறித்த வீதியினை துப்புரவு செய்துள்ளனர்.

இரணைப்பாலை சந்திக்கும் புதுமாத்தளன் சந்திக்கும் இடையில் வீதியின் இருபுறமும் துப்புரவு செய்யப்பட்டதன் காரணமாக மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் புதுக்குடியிருப்பு நகரத்திற்கு பாதுகாப்பாக சென்று வரக்கூடியதாக உள்ளதாக பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-4-6-350)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் குருதிக்கு தட்டுப்பாடு

(முறிகண்டி)

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு குருதி தேவைப்படுவதாக குருதிப் பிரிவு தெரிவித்துள்ளது.

AB, B குருதிவகை பற்றாக்குறை காணப்படுவதாகவும், கொவிட் தடுப்பூசி நாடளாவிய ரீதியில் செலுத்தப்படுவதால் குருதி தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் குருதி பற்றாக்குறையை தீர்க்க கொடை யாளர்கள் முன்வர வேண்டும் என கிளிநொச்சி வைத்தியசாலையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கொடையாளர் ஒருவர் முன் வரும்போது, அவர் கொவிட் தொற்றுக்குள்ளான வர் எனின் குணமடைந்த பின்னர் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை திகதியிலிருந்து ஒரு மாதம் கடந்தவராகவும், தடுப்பூசி பெற்றிருப்பின் ஒரு வாரம் கடந்தவராகவும் இருக்க வேண்டும் என அறிவுறுத் தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவற்றையும் கருத்தில் கொண்டு இரத்த வங்கிக்கு குருதி கொடைகளை வழங்க முன்வர வேண்டும் என வைத்தியசாலையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (7-4-6-100)

# உவர்நிலத்தை நன்னிலமாக மாற்ற மழை நீரைச் சேமியுங்கள்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு நந்திக் கடல் சூழலில் உவர் பரவல் காணப்படும் பகுதிகளில் நன்னீரினைத் தேக்கி வைப்பதற்கான நடவடிக்கையினை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும் என பொது அமைப்புக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய குளமான முத்தையன்கட்டு குளத்தின் நீர் உட்பட பல்வேறு ஆற்றுப்படுகைகளின் நீர் நந்திக்கடலினை நிரப்புவதனால் வட்டுவாகல் பகுதியில் இயற்கையான மண் அணை ஆண்டு தோறும் வெட்டப்பட்டு பெருங்கடலுடன் நந்திக் கடலின் நீரினைக் கலக்க விடுகின்ற நிகழ்வு நடைபெறும்.

இந்நிலையில் நந்திக் கடலுக்கு அருகில் உவராகி வரும் நிலப்பகுதிகளில் பெரும் பாத்திகளை உருவாக்கி மழை காலத்தில் கூடுதலான நன்னீரினை தேக்குவதன் மூலம் உவர் நிலம் நன்னிலமாக மாறும்.

நந்திக் கடலில் கூடுதலான நன்னீரினை சேமிப்பதன் மூலம் முல்லைத்தீவு நகரத்தின் நிலத்தடி நீரினைப் பாதுகாக்கக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும்.

இது தொடர்பான திட்டங்களை மாவட்டச் செயலகம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே முல்லைத்தீவு பொது அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது.

(7-4-6-350)

# பளை இந்திராபுரம் பகுதியில் முதியவரைத் தாக்கி கொள்ளை

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இந்திராபுரம் பகுதியில் நள்ளிரவுவேளை வீடுபுகுந்து முதியவரை கயிற்றால் கட்டி விட்டு பணம், நகை என்பன கொள்ளை இடப்பட்டுள் ளன.

இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(7-4-6-316)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

12.08.2021
ஆடி 27, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.19 மணிவரை
உத்தரம் முற்பகல் 10.28 மணிவரை
சுபநேரம் -7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சந்திராஷ்டமம்- பூரட்டாதி
நாக சதுர்த்தி விரதம்

வளவன்


மேஷம்

மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.


மிதுனம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கடகம்

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் , போசன சுகமுண்டு.


கன்னி

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், அலைச்சல்கள் சற்று கூடும்.


விருச்சிகம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


தனுசு

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


மகரம்

உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கும்பம்

நல்லவரென நினைத்த ஒருவர் உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.


மீனம்

செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

உன் ஒழுக்கம் என்பது விதை போன்றது

# மன்னாரில் 10 நாட்களில் 180 தொற்றாளர்கள் அடையாளம்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் கடந்த 10 நாட்களில் 180 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் 57 ஆயிரத்து 626 பேருக்கு கொரோனா தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசியாக பைஸர் மற்றும் சினோபார்ம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரண்டாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. சினோபார்ம் தடுப்பூசியின் 2 ஆவது தடுப்பூசி பெற்றுக்கொள்ள தவறியவர்கள் 023 222 2916 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 9 மணிமுதல் மாலை 3.30 மணி வரை தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொண்டால் அவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

இதேவேளை நேற்று முன் தினம் மாலை மன்னார் மாவட்டத்தில் மேலும் 17 கொரோனாத் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே தடுப்பூசி செலுத்தப்பட்டாலும் மக்கள் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

மடு மாதா உற்சவத்திற்கு வரும் பக்தர்கள் கடுமையான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்தலுடன் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

இயன்றவரை வழிபாடுகளை முடித்துக் கொண்டு விரைவாக அவர்களுடைய இல்லங்களுக்கு திரும்புமாறு வேண்டப்படுகிறார்கள்.

இன்றைய தினம் மன்னார் நகரத்தில் சித்திவிநாயகர் இந்து கல்லூரி, மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, நானாட்டான் டிலாசால் பாடசாலை , மடு தட்சணா மருதமடு பாடசாலை, மறிச்சுக்கட்டி அல். யசிர் பாடசாலை என்பவற்றில் இரண்டாம் கட்ட பைஸர் தடுப்பூசி வழங்கப்பட உள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் மேலும் தெரிவித்தார். (7-4-6-285)

# ஒட்டறுத்த குளத்தில் காட்டு யானைகள் அட்டகாசம் மின்சார வேலி அமைக்க கோரிக்கை


(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பிரதேசத்தில் உள்ள ஒட்டறுத்தகுளம் கிராமத்தினுள் நுழைந்த காட்டு யானைகள் வீட்டுத்தோட்ட பயிர்களையும் விவசாய நிலங்களையும் நாசம் செய்ததாக பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை கிராமத்தினுள் நுழைந்த யானைகள் வீட்டு காணிகளில் உள்ள தென்னைகள், வாழைகள் போன்ற பயன்தரு மரங்களை நாசம் செய்திருந்தன.

குறித்த பகுதிகளில் யானைகள் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதால், தங்களின் விவசாய நிலங்களை பாதுகாக்கும் நோக்கில் மின்சார பாதுகாப்பு வேலி ஒன்றை விவசாயிகள் கோரி நிற்கின்றனர்.

அண்மைக்காலமாக குறித்த பிரதேசம் யானைகள் நடமாடும் பகுதிகளாக காணப்படுவதுடன் , அண்மையில் பருத்தித்துறை வாசி ஒருவர் இரவு வேளையில் குறித்த பகுதியில் பயணம் செய்த வேளை யானை தாக்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-281-315)



# ஆவணி மாத மடு திருவிழா 150 பேருக்கு மட்டுமே அனுமதி

(மன்னார்)

நீண்ட பயணங்களை மேற்கொண்டு மடு திருத்தலத்தின் ஆவணி திருவிழாவில் கலந்து கொள்ள வருகின்றவர்கள் தமது பயணங்களை நிறுத்தி நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றின் காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் மடு திருத்தலத்தில் நேற்று புதன்கிழமை காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மன்னார் மறை மாவட்ட ஆயர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த திருப்பலிகளில் மொத்தமாக 150 நபர்கள் மாத்திரம் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே இக்கால கட்டத்தில் மாகாணங்களுக்கு இடையே உள்ள பயணக் கட்டுப்பாடுகள் ஓரளவு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் மடு அன்னையின் திருவிழா அன்று மடு திருத்தலத்திற்கு வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தர முடியாது.

மடு வீதி வரை வந்தாலும் மடு திருத்தலத்திற்கு செல்ல முடியாமல் பாதுகாப்பு தரப்பினரால் திருப்பி அனுப்பப்படுவார்கள். யாத்திரிகர்கள் பலர் பல தூர இடங்களில் இருந்து வருகை தர முயற்சிக்கின்றனர்.

அவ்வாறு வருகின்றவர்கள் தமது வருகையை நிறுத்திக் கொள்ளுங்கள். பல்வேறு பிரசசினைகள் உள்ளமையினால் உங்களின் நீண்ட பயணத்தை நிறுத்தி உங்கள் வீடுகளில் இருந்து தொலைக்காட்சி, இணையத் தளங்கள் ஊடாக திருவிழாவை பார்க்க முடியும் எனவும் குறிப்பிட்டார். (7-4-6-285)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முருகப்பெருமானுக்கு தமிழில் அர்ச்சனை

(பழனி)

**நீண்ட நாட்களாக தமிழ் கடவுள் முருகனுக்கு தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை வைத்திருந்த நிலையில் அது நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.**



தமிழகம் முழுவதும் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப் பாட்டில் உள்ள கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் நடைமுறை கடந்த 5 ஆம் திகதி முதல் தொடங்கியது.

சென்னை கபாலீஸ்வரர் கோவிலில் இதனை தொடங்கி வைத்த அமைச்சர் சேகர்பாபு விரைவில் தமிழகத்தில் உள்ள அனைத்து கோவில்களிலும் இந்த நடைமுறை அமுல்படுத்தப் படும் என்று தெரிவித்தார்.

அந்த வகையில் முருகப் பெருமானின் 3 ஆம் படை வீடான பழனியில் தமிழில் அர்ச்சனை செய்யும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பமானது. இதனால் கோவிலுக்கு வந்த பக்தர்கள் மிகுந்த மகிழ்ச்சிய டைந்தனர்.

அதேபோல் பழனி கோவி லின் உப கோவில்களான திரு ஆவினன்குடி, பெரியநாயகி அம் மன், பெரியாவுடையார், மாரியம் மன், கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோவில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யும் முறை நேற்று முதல் தொடங்கி யது.

ஒவ்வொரு கோவிலிலும் இது குறித்து அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டு தமிழில் அர்ச் சனை செய்யும் அர்ச்சகரின் பெயரும் அதில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (7-4)


## இந்திய வீர, வீராங்கனைகளுக்கு ஜனாதிபதி தேநீர் விருந்து

(டில்லி)

டோக்கியோ ஒலிம்பிக் கில் 1 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களுடன் இந்தியா 48 ஆவது இடத்தினைக் கைப்பற்றி யது.

ஒலிம்பிக் போட்டிகள் நிறை வடைந்த நிலையில் நாடு திரும்பிய வீர, வீராங்கனை களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில், டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற இந்திய வீர, வீராங்கனைகளுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் எதிர்வரும் 14 ஆம் திகதி தேநீர் விருந்து அளிக்க உள்ளார்.



டில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் இந்த தேநீர் விருந்து நிகழ்ச்சி நடைபெற உள் ளது. (7-4)

## அமெரிக்கா-தென் கொரியா போர் ஒத்திகை

(பியாங்யாங்)

அமெரிக்காவுடன் இணை ந்து தென் கொரியா போர் ஒத்திகையில் ஈடுபட்டால், அதற்குப் பதிலடியாக தங்க ளது முன்கூட்டிய தாக்குதல் திறனை அதிகரித்துக் கொள் ளப் போவதாக வடகொரியா எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டு ஜனாதிபதி கிம் யாங்-உன்னின் சகோதரி கிம் யோ-யாங் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டு ள்ளதாவது,

அமெரிக்காவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே கணனி மூலமான போர்ப் பயிற்சி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னதாக, இர ண்டு நாட்டுப் படைகளும் இணைந்து நான்கு நாட்க ளுக்கு போர் ஒத்திகையில் ஈடுபடப் போவதாக தென்கொரிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்மூலம், வடகொரியா மீதான படையெடுப்புக்கு அமெரிக்காவும் தென்கொரியாவும் ஒத்திகை பார்க் கவுள்ளன.

எனவே அந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக முன்கூட்டியே தாக்குதல் நடத்தும் எங்களது திறனை நாங்கள் மேம்படுத்திக் கொள்வோம்.

வடகொரியாவை பேச்சுவார்த்தை க்கு அழைத்து வரும் அமெரிக்க அரசு இதுபோன்ற இராணுவ ஒத்தி கையில் ஈடுபடுவதன் மூலம் தனது இரட்டை வேடத்தை வெளிப்படுத் தியுள்ளது என்று கிங் ஜோ-யாங் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வடகொரியாவின் எச்சரி க்கையை மீறி இராணுவப் பயிற்சி நடத்துவது தென்கொரியாவின் துரோக முடிவு என்றும் கூறி யுள்ளார். (7-4)

## இந்தியாவில் இருந்து அபுதாபிக்கு வருபவர்களுக்கு 12 நாட்கள் தனிமைப்படுத்தல் கட்டாயம்

### எதிகாத் விமான நிறுவனம் தகவல்

(அபுதாபி)

அபுதாபி அவசரம், நெருக் கடி மற்றும் பேரிடர் மேலா ண்மை கமிட்டி வெளியிட்டு ள்ள தனி மைப்படுத்துதலு க்கான விதி முறைகள் தற் போது மாற்றிய மைக்கப்பட் டுள்ளது.

அதன்படி பசுமை நாடு களின் பட்டியலில் இடம் பெறாத இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அபுதா பிக்கு வருகை தரும் பய ணிகளுக்கு புதிய விதி முறைகள் வெளியிடப்பட்டு ள்ளன.

இதில், பசுமை நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள பகுதிகளில் இருந்து அபுதா பிக்கு வருகை தரும் பயணி கள் அபுதாபி விமான நிலை யத்திற்கு வந்ததும் கட்டாயம் பி.சி.ஆர். பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் இருந்து வரும் விமான பயணிகள் அமீரகத்தில் 2 டோஸ் கொரோனா தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும். தடுப்பூசி ஏற்றி குறைந்தது 14 நாட்கள் நிறைவடைந்திருக்க வேண் டும்.

மேலும் விமான நிலை யத்தில் குடியேற்ற பிரிவு சோதனை நிறைவு பெற்ற தும் அவர்களுக்கு மருத்து வத்துறையால் அங்கீ கரிக் கப்பட்ட கைப்பட்டைகள் அணி விக்கப்படுகிறது.

அதன் பிறகு தங்களை அவர்கள் 12 நாட்கள் கட்டாய தனிமைப் படுத்துதலுக்கு உட்படுத்திக்கொள்ள வேண் டும்.

6 ஆவது நாளில் ஒரு பி.சி. ஆர். பரிசோதனையும், பிறகு 11 ஆவது நாளில் ஒரு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்வது கட்டாயமா கும் போன்ற விதி முறைகள் தேசிய எதிகாத் விமான நிறுவனத்தினால் வெளியிடப் பட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (7-4)

### உலகளவில் கொரோனா

**உயிரிழப்பு :- 4 329 952**

**தொற்று :- 204 893 643**

**(நேற்றைய மாலை நிலவரம்)**

## கால்வாயில் கலந்த பெ கரையொதுங்கியது பல்லாயி

(ஒஸ்லோ)

க்ரீக் எனப்படும் சர்வதேச கடல் உணவு நிறுவனத்தின் வடக்கு நோர்வேயில் உள்ள தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய 15,000 லீற்றர் வரையான குளோரின் கால் வாயில் கலந்ததில் சுமார் 96,000 சால்மன் மீன்கள் இறந்து கரையொது ங்கியுள்ளன.


ஒவ்வொரு ஆண்டும் வட அமெ ரிக்கா மற்றும் ஆசிய பிராந்தியங்களு க்கு சுமார் 25,000 தொன்களுக்கு மேல் சால்மன் மீன்களை விநியோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் கூடிய விரைவில் தலிபான்கள் வசமாகும்-ஜோ பிடன்

(வோஷிங்டன்)

**ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க இராணுவத்தை விலக்கிக்கொண்ட முடிவு குறித்து தனக்கு எந்த வருத்தமும் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.**



தலிபான்களை எதிர்த்து அந்நாட்டுத் தலைவர்களே ஒன்றிணைந்து போராட வேண்டும். தங்கள் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களுக்கே உள்ளது எனவும் பிடன் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ படைகள் வெளியேறிவிட்ட நிலையில் அங்கு தலிபான்கள் எழுச்சி பெற்றுள்ளனர்.

நாட்டில் உள்ள 34 மாகாணங்களில் குறைந்தது எட்டு மாகாணங்களின் தலைநகரங்களை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

முக்கிய எல்லைகளை தலிபான்கள் கைப்பற்றியுள்ளதன் மூலம் ஆப்கானிஸ்தானில் இருக்கும் நகரங்களுக்கு இடையேயான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆப்கான் அரசாங்கம் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது.

அத்துடன், ஆப்கானிஸ்தான் படைகளும் தலிபான்களை எதிர்கொள்ள முடியாது திணறி வருகின்றன.

இதனால் ஆப்கானிஸ்தான் கூடிய விரைவில் மீண்டும் தலிபான்கள் வசமாகும் எனக் கருதப்படுகிறது.

இந்நிலையிலேயே தீவிரவாத ஒழிப்பு என்ற போர்வையில் 20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் இருந்த அமெரிக்கப் படைகள் ஆப்கானை முழுமையாகக் கைவிட்டு வெளியேறியுள்ளன.

எனினும் இந்த முடிவில் தனக்கு எந்த வருத்தமும் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

## கொரோனா பாதித்த கர்ப்பிணிகளுக்கு குறைப் பிரசவத்துக்கு அதிக வாய்ப்பு

### ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

கொரோனாத் தொற்றுக்கு ஆளாகும் கர்ப்பிணிகளுக்கு வைரஸால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு செய்துள்ளனர்.



அதில் கர்ப்ப காலத்தின் ஒரு கட்டத்தில் தொற்றுக்கு ஆளாகும் கர்ப்பிணிகளுக்கு முன்கூட்டிய பிறப்பு அல்லது குறைப் பிரசவத்துக்கு அதிக வாய்ப்பு இருப்பது தெரியவந்துள்ளது.

அந்த வகையில், கருவுற்றதில் இருந்து 32 வாரங்களுக்குள் பிரசவம் ஏற்படும் ஆபத்து 60 சதவீதமாகவும் 37 வாரங்களுக்குள் குழந்தை பிறக்கும் ஆபத்து 40 சதவீதமாகவும் உள்ளது.

அதிலும் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு அல்லது உடல் பருமன் போன்ற பிரச்சினை உள்ள கர்ப்பிணிகளுக்கு குறைப் பிரசவ ஆபத்து அதிகம் உள்ளதாக தெரிய வந்துள்ளது.

எனவே தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகள் மூலம் கர்ப்பிணிகளை பாதுகாக்க வேண்டும் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.(7-4)

## சீனாவில் உளவு பார்த்த கனேடியருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை

(பீஜிங்)

சீனாவில் உளவாளியாகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கனேடியரான மைக்கேல் ஸ்பேவர் குற்றவாளி என சீன நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு, அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கனேடியரான மைக்கேல் ஸ்பேவர் மீது சீனாவில் உளவு பார்த்தமை மற்றும் அரச இரகசியங்களைத் திருடி ஏனைய நாடுகளுக்கு வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் சீனாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றொரு கனேடியரான ரொபேர்ட் ஷெல்லன்பெர்க் என்பவருக்கு சீன நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டு 24 மணிநேரங்களில் இந்தத் தீர்ப்பு வெளியானது.

குவாவி தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி மெங் வான்சோ கனடாவில் கைது செய்யப்பட்டமை, அதனைத் தொடர்ந்து இரு கனேடியர்கள் சீன அரசால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமை ஆகியவற்றால் சீனா-கனடா இடையிலான உறவுகள் சீர்குலைந்துள்ள நிலையில் இந்தத் தீர்ப்பு இரு நாட்டு உறவுகளில் மேலும் விரிசல்களை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. (7-4)

## அல்ஜீரியா காட்டுத்தீயில் 25 இராணுவ வீரர்கள் பலி

(அல்ஜீரியஸ்)

அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜீயர்ஸின் கிழக்கில் கடந்த திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட காட்டுத்தீயை எதிர்த்துப் போராடிய 25 அல்ஜீரிய இராணுவ வீரர்கள் உட்பட 42 பேர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அல்ஜீயர்ஸுக்கு கிழக்கே 100 கி.மீ. (62 மைல்) தொலைவில் உள்ள டிஸி ஓசோ மாகாணத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் முன்பு தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் இரவு அரசு தொலைக்காட்சியில் பேசிய அந்நாட்டு பிரதமர் அய்மான் பெனாப்டெர்ரஹ்மானே இராணுவத்தின் 25 வீரர்கள் உட்பட பலி எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது. விமானங்களை வாடகைக்கு எடுப்பதற்கும், தீயை அணைக்கும் செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு, வெளிநாட்டுகளுடன் அரசாங்கம் மேம்பட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. தீயணைப்பு வீரர்கள் மற்றும் இராணுவம் இன்னும் தீயை அணைக்க முயன்று வருகின்றன. அதிகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (7-4)

## பெருமளவு குளோரின் ...ாயிரக்கணக்கான மீன்கள்

செய்யும் க்ரீக் நிறுவன தொழிற்சாலையிலிருந்தே குளோரின் கசிந்துள்ளது.

கடலுணவு நிறுவனத்தில் சுத்திகரிப்பு பணிகளுக்காக பயன்படுத்த சேமித்து வைக்கப்பட்டிருந்த குளோரினே கால்வாயில் கலந்துள்ளது.

இதேவேளை, கால்வாயில் கசிந்த குளோரின் ஏற்கனவே அட்லாண்டிக் பெருங்கடல் வரை பரவியுள்ளதாகவும் இந்தச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் நோர்வே பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு விவாகரத்தை இலங்கையிலும் ஏற்க தீர்மானம்

(கொழும்பு)

**வெளிநாடு ஒன்றில் மேற்கொள்ளப்படும் விவாகரத்து, திருமணத்தை இரத்துச் செய்தல் மற்றும் நீதித்துறை ஊடாக பிரித்தல் ஆகியவற்றை அனுமதிப்பதற்கான சட்ட திருத்தம் மேற்கொள்ள நீதி அமைச்சு தயாராகியுள்ளது.**

அதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்படக்கூடிய ஒரு சட்ட மூலம் தயாரிக்கப்படவுள்ள நிலையில் அதற்கான நடவடிக்கை சட்டமன்ற உறுப்பினரால் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையில் திருமணம் செய்து வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள், அந்த நாடுகளில் திருமண வழக்குத் தாக்கல் செய்து பெறும் தீர்மானம் இலங்கையில் இது வரையில் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. இதனால் உரிய தரப்பினர் கடுமையான நெருக்கடி நிலைக்கு முகம் கொடுக்கின்றனர்.

இலங்கையினுள் அவ்வாறான தீர்மானத்திற்கமைய செயற்படுவதற்கு, அவர்கள் மீண்டும் இலங்கையில் விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நிலைமையை தவிர்ப்பதற்காக வெளிநாட்டு விவாகரத்தை இலங்கையில் ஏற்றுக்கொள்வதற்காக சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (நி-5)

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்பில் அச்சமடைய வேண்டாம்

## லிட்ரோ நிறுவன தலைவர்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவிற்கான தட்டுப்பாடு நீங்கும் வகையில், ஒரு இலட்சம் வீட்டு பாவனைக்கான சமையல் எரிவாயு சிலிண்டர்களை நாளாந்தம் சந்தைகளுக்கு விநியோகிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார். சந்தைகளுக்கு எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப் பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமையல் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு நில்வுவதாக அச்சமடைய வேண்டாமென பொது மக்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ள அதேநேரம் நாட்டிற்குத் தேவையான சமையல் எரிவாயு தமது நிறுவனத்திடம் உள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார். (நி-5)

# ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜப்பான்

(கொழும்பு)

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்த இலங்கையில் உள்ள ஜப்பானியத் துதுவர் அகிரா சுஜியாமா, ஜப்பான், டோக்கி யோவில் இந்த ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று இலங்கை காட்டிய மனிதாபிமான ஒத்துழைப்புக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பு ஓகஸ்ட் 9 ஆம் திகதி வெளிநாட்டு அமைச் சில் நடைபெற்றது. (நி-5)

# சான்றிதழ்களை பெறுவதற்கு ஒன்லைன் மூலம் விண்ணப்பிக்கவும்

## பரீட்சைத் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சுகாதார நிலைமைகளுக்கு அமைய தமது திணைக்களத்தினூடாக சேவைகளை வழங்கும் முறை குறித்து இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சான்றிதழ்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை ஒன்லைன் மற்றும் மின்னஞ்சல் ஊடாக மாத்திரமே மேற்கொள்ள முடியும் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சான்றிதழ்தேவைக்கு அமைவாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அல்லது துரித தபால் மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

இலங்கை கல்வித் திணைக்களத்தின் அதிகாரபூர்வ மொபைல் பயன்பாடு DOE ஊடாகவும் சான்றிதழ்களை கோரி விண்ணப்பிக்க முடியும்.


இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2379

### சரண்




### தர்ஷன்



'நவரச' ரசனை உடைய பெண் தான் வேண்டும் என்று தேடுபவனுக்கு....
'புளிரசம்' கூட ஒழுங்கா வைக்க தெரியாத பொண்ணு தான் மனைவியாக அமைவா....
ஏன் என்றால் விதி வலியது

### சபிதா



குடை மழையை நிறுத்தாது.
ஆனால்,நம்மை நனையாமல் தடுக்கும்.
தைரியம் பிரச்சினைகளை தீர்க்காது.
ஆனால்,அதை எதிர்த்து போராட உதவும்

### கனுஷாந்

பெற்றோர் 'சொல்'லுக்கு அடங்காத குழந்தை கூட பெற்றோர் "செல்'லுக்கு அடங்குகிறது.



### சாணுஜா

ஒரு கால் உடைந்த ஒருத்தன் ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆகுறான்.
பக்கத்து பெட்ல உள்ளவனுக்கு இரண்டு கால்லயும் பண்டேஜ்
பாவமாக பார்த்து எண்ணி கொண்டான் ஒருவேளை அவருக்கு ரெண்டு பொண்டாட்டி ஆ இருக்கும் என்று



### கபில்

நோயாளி-டாக்டர் என்னால் முழுசா இரண்டு இட்லி கூட சாப்பிட முடியல.
டாக்டர்- யாராலையும் ரெண்டு இட்லி முழுசா சாப்பிட முடியாது.




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களில் அதிரடி மாற்றங்கள்?

(கொழும்பு)

**அமைச்சரவையை மறுசீரமைக்கும் வகையில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

வெளிவிவகாரம், சுகாதாரம், கல்வி, ஊடகம் மற்றும் வலுசக்தி ஆகிய முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களிலேயே மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் பிரகாரம் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதிய வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார். தற்போது வெளிவிவகார அமைச்சராக உள்ள தினேஷ் குணவர்த்தன உயர் கல்வி அமைச்சராக நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக இருக்கும் ரமேஷ் பத்திரண சுகாதார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார். ரமேஷ் பத்திரண தற்போது வகிக்கும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு பொறுப்பு கெஹலிய ரம்புக்வெலவிற்கு வழங்கப்படவுள்ளது.

ரம்புக்வெல வசம் இருக்கும் ஊடக அமைச்சுப் பொறுப்பு தற்போது வலுசக்திஅமைச்சராக இருக்கும் டலஸ் அழகப்பெரும வசம் செல்லும் எனத் தெரிய வருகிறது.

இந்நிலையில் தற்போது சுகாதார அமைச்சராக இருக்கும் பவித்ரா வன்னியாராச்சியிடம் வலுசக்தி அமைச்சுப் பொறுப்பு ஒப்படைக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

அத்துடன், சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க புதிய கல்வி அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

இந்த மறுசீரமைப்பு நேற்று முன்தினம் நடைபெறும் என்று ஊகிக்கப்பட்டபோதும் அது இடம்பெறவில்லை. எனினும் இன்றோ அல்லது அடுத்த சில நாட்களிலேயோ அமைச்சரவையில் மறுசீரமைப்பு இடம்பெறும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)

# வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்கு விமான நிலையத்தில் எழுமாறாக பரிசோதனை

(கொழும்பு)

வெளிநாட்டு பணியாளர்களுக்காக, விமான நிலைய வளாகத்தில் எழுமாறாக கொவிட்-19 பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் அடுத்த வாரம் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பி, மீளவும் வெளிநாடுகளுக்கு பணிக்கு செல்ல உள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள தடையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது. (நி-5)

# இராணுவ மருத்துவத்துறையினரே தடுப்பூசி வழங்குகின்றனர் - கமால்

(கொழும்பு)


இராணுவம் என்றவுடன் மருத்துவம் தெரியாத பீரங்கி தூக்குபவர்களை தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தியதாக சிலர் நினைக்கின்றனர்.

மாறாக இராணுவ மருத்துவத்துறையில் அனுபவம் பெற்றவர்களே தடுப்பூசி வழங்க ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.

நேற்று பத்தரமுல்லையிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களின் உயிரை பாதுகாப்பது என்பது தேசிய பாதுகாப்பை சார்ந்ததாகும்.

உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் நோய் பரவும் சந்தர்ப்பத்தில் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு படை வீரர்களை சாரும்.



எனவே தான் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்திற்கு ஜனாதிபதி முப்படையினரை ஈடுபடுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# மேலும் 15,000 ஸ்புட்னிக் வி நாட்டை வந்தடைந்தன



(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் 15 ஆயிரம் டோஸ் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் ரஷ்யாவினால் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், 15 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளுடன் விமானம் ஒன்று ரஷ்யாவிலிருந்து நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தது.

இலங்கையில் அனுமதி கொடுக்கப்பட்ட தடுப்பூசிகளில் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியும் ஒன்றாகும்.

இதற்கு முன்னரும் ரஷ்யா இலங்கைக்கு நன்கொடையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆதவனைப் பார்த்தால் ஆபத்து!

என்னுடைய நண்பர் ஒருத்தர் தினமும் தவறாமல் சூரிய நமஸ்காரம் செய்வார். அதிகாலையிலே எழுந்திருப்பார். ஆற்றுக்குப் போவார், குளிப்பார். சூரியன் உதயமாகும். அதைப் பார்த்து கும்பிடுவார். அதற்குப் பின்பு தான் அவர் மற்றைய வேலைகளை ஆரம்பிப்பார்.

சூரியன் உதயமாவதற்கு முன்னரேயே எழுந்திருந்து குளிர்ந்த நீரிலே குளிக்கிறது... மருத்துவ ரீதியாகவே உடம்புக்கும் மனதிற்கும் நல்லது. இருந்தாலும் சூரிய நமஸ்காரம் செய்யக் கூடாத ஒரு நேரம் உண்டு. அது எது தெரியுமா? சூரிய கிரகணம் உண்டாகிற நேரம்.

சூரிய கிரகணம் உண்டாகிற நேரத்திலே சூரியனை உற்றுப் பார்க்கிறது ரொம்ப ஆபத்தான விடயம். பார்வையை பாதித்து விடும். சாதாரணமாகவே சூரியனை நம்ம கண்ணாலே உற்றுப் பார்க்க முடியாது. அளவுக்கு அதிகமான பிரகாசம். அதனாலே பார்க்கிறது கஷ்டம்.

கிரகண சமயத்திலே என்ன ஆகுது என்றால் நிலவு குறுக்கே வந்திடுது. சூரியனை மறைக்குது. பிரகாசம் குறைகிறது. அதனாலே அந்தச்சமயம் சூரியனை பார்க்கிறது சுலபம். இருந்தாலும் அப்படிப் பார்க்க ஆசைப்படக்கூடாது. அது கண் பார்வையைக் கெடுத்து விடும்.

ஆபத்து என்று தெரிந்தால் கூட அதைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் உண்டு. முக்கியமாக குழந்தைகள் அந்தச்சமயத்திலே சூரியனைப் பார்க்க ஆசைப்படும். அது தப்பு என்று பெரியவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

குழந்தைகளிடம் அப்படிச் சொல்லிவிட்டு இவர்கள் மட்டும் தனியாக ஓடிப்போய் கொல்லைப்பக்கம் நின்று கொண்டு பார்க்கக்கூடாது.

கிரகண சமயத்திலே சூரியனை நிலவு மறைத்தால் கூட, வெளிச்சம் தடுக்கப்பட்டால் கூட – Ultra Violet புற ஊதாக் கதிர் வந்து கொண்டிருக்கும். நமக்குத் தெரியாமலே நம்ம கண்ணுக்குள்ளே புகுந்திடும். புற ஊதாக்கதிரின் Photo Chemical Effect இனாலே விழித்திரை பாதிக்கப்படும்.

சிலபேரு கிரகண சமயத்திலே சூரியனைப் பார்த்து விட்டு எனக்கு ஒன்றும் ஆகவில்லை என்பார்கள்! என்ன ஆகியிருக்கிறது அவர்களுக்கு தெரியாது! ஏதாவது ஒரு வேலை கிடைத்து மருத்துவ பரிசோதனைக்குப் போவார்கள். அப்போது டாக்டர் சொல்லுவார்... உங்கள் பார்வையிலே கோளாறு இருக்கு என்று!

கிடைக்க இருந்த வேலையும் கிடைக்காமல் போய்விடும்! சில நுணுக்கமாக வேலைகளிலே ஈடுபடுகிற போது நம்மாலே துல்லியமாக பார்க்க முடியாது. உதாரணமாக மைக்கிராஸ்கோப் மூலமாக பார்க்கிறபோது தடுமாறுவார்கள்!

சிலபேரு சொல்லுவார்கள் கிரகணத்தை நேரிலே தானே பார்க்கக்கூடாது. புகைக்கண்ணாடி மூலமாக பார்க்கிறேன். பாத்திரத்திலே தண்ணீர் வைத்துக்கொண்டு அதனுடைய பிரதிபலிப்பைப் பார்க்கிறேன்! இப்படியெல்லாம் சொல்லுவார்கள். ஆனால் நிபுணர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அப்படிப் பார்க்கிறதும் தப்பு என்று.

கூலிங்கிளாஸ் போட்டுக் கொண்டு பார்த்தாலும் அது சூரியனின் பிரகாசத்தைத்தான் குறைக்குமே தவிர புற ஊதாக் கதிர் நுழைவதைத் தடுக்காது என்கிறார்கள்!

ரொம்ப சுலபமாக பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் யாரு தெரியுமா? குழந்தைகள் உயரமான இடத்திலே அதாவது மலைப்பகுதிகளிலே இருக்கிறவர்கள் ஏற்கனவே Cataract ஆபரேஷன் செய்து கொண்டவர்கள். இவர்களெல்லாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஒரு அம்மா அவருடைய வீட்டுக்காரரை அழைத்துக் கொண்டு அவசர அவசரமாக மனோதத்துவ டாக்டரிடம் வந்தார்.

"டாக்டர் எங்க வீட்டுக்காரர் திடீர் என்று எழுந்திருந்து கொஞ்ச நேரம் நான் வானத்திலே உள்ள முழுநிலவைப் பார்த்து விட்டு வருகிறேன். என்னை தொந்தரவு செய்யாதே என்று சொல்லி விட்டு வெளியே போனார்.

பத்து நிமிடம் வானத்தை உற்றுப்பார்த்தார். நிலா ரொம்ப அழகாக இருக்கு என்று சொல்லுகிறார் டாக்டர்!" என்றார்.

"அதிலே என்ன தப்பு?" என்று கேட்டார் டாக்டர். "நேற்று அமாவாசையாச்சே டாக்டர்!" என்றார் அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

06

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் :- (1) ஜோர்ஸ் தவராஜா தம்பிராஜா, (2) சொலமன் கிங்ஸ்லிலி றொபட், (3) இரத்தினம் திலகராஜா, (4) சித்திரவேல் தயாபரன், (5) லைலி பொன்சேகா பாலிவா போல் ராஜ் பாலிவா, (6) எம்.எம்.ரிசான், (7) அப்துல் மஜீட் மொஹமட் ஜவாட், (8) எம்.ஆர். ஜலால்தீன் ரூமி , (9) எம்.எம்.மொஹமட் வஸீர், (10) எம்.ஜே.எம். உக்காஸ்.

யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர் எம்.ஆர். குலதீபன் தனது மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு அண்ணாமலை வரதராஜப் பெருமாள், 1988.12.08 ஆம் திகதியிடப்பட்ட 535/15 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் மாகாணசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டிசெம்பர் 10, 1988 அன்று அண்ணாமலை வரதராஜபெருமாள் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதல் அமைச்சரானார்.

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் பிரதான எதிர்க் கட்சியாக ஜனாப் M.H.M. அஸ்ரப் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) விளங்கியது. ஒரே பார்வையில் வடக்கு, கிழக்கு மாகாண சபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்ட விதத்தினைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். அட்டவணை 4 ஐப் பார்க்க.

அட்டவணை 4
வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் 1988

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | EPRLF/ ENDLF | SLMC | UNP | மொத்தம் |
| யாழ்ப்பாணம் | 19 | - | - | 19 |
| கிளிநொச்சி | 3 | - | - | 3 |
| மன்னார் | 5 | - | - | 5 |
| வவுனியா | 4 | - | - | 4 |
| முல்லைத்தீவு | 5 | - | - | 5 |
| மட்டக்களப்பு | 8 | 3 | - | 11 |
| அம்பாறை | 4 | 9 | 1 | 14 |
| திருகோணமலை | 5 | 5 | - | 10 |
| Bonus | 2 | | | 2 |
| மொத்தம் | 55 | 17 | 1 | 73 |

### வடக்கு-கிழக்கு மாகாண சபையை இயங்கச் செய்வதில் மாகாண அரசுக்கு இருந்த பிரச்சினைகள்

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாண சபையை ஈ.பி.ஆர்.எல்.எவ். கைப்பற்றியது. அதன் முதலமைச்சராக வரதராஜப் பெருமாள் இருந்தார். மாகாண சபைகளுக்கு அதிகாரங்களின் நிரலில் தீர்மானிக்கப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் பொதுவாக ஒதுக்கப்பட்ட அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்கும்படி வரதராஜப் பெருமாள் கோரிக்கை விடுத்தார்.

மாகாண சபையை இயங்கச் செய்வதில் மாகாண அரசுக்கு உரிய பிரச்சினைகள் பற்றி 27.04.89 இல் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் ஒவ்வொரு துறையிலும் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக நீண்ட ஒரு உரையை ஆற்றியிருந்தார். அவ் உரையின் ஒரு பகுதி இங்கு மீள்பதிவு செய்யப்படுகின்றது.

"வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தின் அமைப்பு வேலைகளையும் அதற்குரிய அதிகாரங்களையும்வென்றெடுக்கின்ற வேலைத் திட்டங்களையும் பல்வேறு வடிவங்களில் நாம் மேற்கொண்டு வருகின்ற இன்றைய கால கட்டத்தில் "அதிகாரப் பரவலாக்கம்" என்ற விடயம் தொடர்பாக, அடிக்கடி பேச வேண்டிய, விவாதிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைகளுக்கு உள்ளாகியிருக்கின்றோம், "ஈழம் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய நாம் இன்று இந்த மாகாண சபையை ஏற்றுக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக இங்கு நோக்குதல் பொருத்தமானது.

"1983 ஆம் ஆண்டு ஜூலை இனப்படுகொலைகளைத் தொடர்ந்து பரந்தளவில் ஈழவிடுதலை இலட்சியத்துடன் ஆயுதப் போராட்டம் உக்கிரமடைந்த வேளையில் இலங்கை அரசு குறிப்பாக இன்று (1989) ஆட்சி பீடத்திலிருக்கும் இதே கட்சிக்காரர்கள் அன்று பேசுவார்த்தை மூலமான சமாதான தீர்விற்கு முன்வந்தார்கள். இதனால் 1985 ஆம் ஆண்டு பூட்டான் தலைநகரான திம்புவில் தமிழ் தீவிரவாத இயக்கங்களுடன் இலங்கை அரசின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அப்போது இலங்கை அரசின் பிரதிநிதிகள் அன்றைய ஜனாதிபதியின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், "1978 ஆம் ஆண்டில் அரசியல் யாப்பில் இருக்கும் சர்வஜன வாக்கெடுப்பு விடயங்களைத் தவிர்த்து ஏனைய விடயங்கள் எல்லாம் மிக உயர்ந்த பட்சமாக அதிகாரப்பரவலாக்கல் செய்யத் தயாராக உள்ளதாக" குறிப்பிட்டனர்.

"குறிப்பாக இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை வகித்த சட்டத்துறை கலாநிதி எச். டபிள்யூ.ஜெயவர்த்தன "ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் இந்திய அரசியலமைப்பில் எந்தளவுக்கு (மருவிய சமஷ்டி அமைப்பு) அதிகாரப் பரவலாக்கல் உள்ளதோ அந்த அளவிற்கு இங்கும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் மிக உயர்ந்த பட்சமான அதிகாரப் பரவலாக்கல் செய்ய இலங்கை அரசு தயாராக இருப்பதாக" குறிப்பிட்டார்.

"இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம்,11 ஆம் மற்றும் 30 (2) ஆவது, 62 (2) ஆவது உறுப்புரைகளை மாற்றுவதற்கு சர்வசன வாக்கெடுப்பு தேவை. ஏனைய அனைத்து உறுப்புரைகளுக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலம் மாற்றக் கூடியவை. இவற்றில் மாற்றியமைக்க வேண்டியவைகளை மாற்றி புதிய அமைப்பு முறையினை உருவாக்கத் தயாராக விருப்பதாக குறிப்பிட்டார்கள்.

"குறிப்பாக இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை வகித்த சட்டத்துறை கலாநிதி எச்.டபிள்யூ.ஜெயவர்த்தன "ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் இந்திய அரசியலமைப்பில் எந்தளவுக்கு (மருவிய சமஷ்டி அமைப்பு) அதிகாரப் பரவலாக்கல் உள்ளதோ அந்த அளவிற்கு இங்கும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் மிக உயர்ந்தபட்சமான அதிகாரப் பரவலாக்கல் செய்ய இலங்கை அரசு தயாராக இருப்பதாக" திம்புவில் குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கமானது தனது தரப்பில் ஒரு உத்தரவாதத்தை எங்களுக்கு அளித்தது. அதாவது "இலங்கை ஒரு சிறிய நாடு. அங்கிருக்கக் கூடிய அனைத்து மக்களும் ஐக்கியமாக வாழ முடியும். அவ்வாறு ஒருமித்து வாழக்கூடிய வகையில் தமிழ் பேசும் மக்களுடைய பாதுகாப்பு, மற்றும் ஏனைய உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் இந்திய மாநில அரசுகள் எந்தளவுக்கு அதிகாரங்களைக் கொண்டுள்ளனவோ அவ்வாறே தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு மாநில அரசினைப் பெற்றுத் தருவதாகவும் அதனை ஏற்றுக் கொள்ளும்படியும்" வற்புறுத்தினார்கள்.

இந்திய அரசாங்கமானது தனது தரப்பில் ஒரு உத்தரவாதத்தை எங்களுக்கு அளித்தது. அதாவது "இலங்கை ஒரு சிறிய நாடு. அங்கிருக்கக் கூடிய அனைத்து மக்களும் ஐக்கியமாக வாழ முடியும். அவ்வாறு ஒருமித்து வாழக் கூடிய வகையில் தமிழ் பேசும் மக்களுடைய பாதுகாப்பு மற்றும் ஏனைய உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் இந்திய மாநில அரசுகள் எந்தளவுக்கு அதிகாரங்களைக் கொண்டுள்ளனவோ அவ்வாறே தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு மாநில அரசினைப் பெற்றுத் தருவதாகவும் அதனை ஏற்றுக் கொள்ளும்படியும்" வற்புறுத்தினார்கள்" வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் 10 நாட்களில் கொரோனா தீவிரமாகும்

(கொழும்பு)

**இலங்கையின் ஒட்டுமொத்த மருத்துவத் துறையும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் நாடு முழுவதும் உடனடியாக முடக்கப்பட்டாலும்கூட, எதிர்வரும் 10 நாட்களில் கொரோனா வைரஸ் பரவும் விதியை மாற்ற முடியாது எனவும் சுகாதார நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.**

டெல்டா மாறுபாடு எந்த மாகாணங்களில் பரவியது என்பதை அடையாளம் காண வைத்தியர்கள் தற்போது வரிசைப்படுத்தலை அதிகரித்துள்ளனர் என்பதோடு, டெல்டா பிளஸ் குறித்த ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

டெல்டா மாறுபாடு மிகவும் அதிகமாக இருக்கும் போது டெல்டா மாறுபாடு இயற்கையாக உருமாறும் போது டெல்டா பிளஸாக மாற்றமடையுமென தெரிவித்துள்ள அவர்கள், இலங்கையில் இது இன்னும் கண்டறியப்படவில்லை என்றாலும், மருத்துவர்கள் விழிப்புடன் நிலைமையை கண்காணித்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

தற்போது டெல்டா மாறுபாடு தான் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தியிருப்பதாக மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர்.

அதிகாரபூர்வ புள்ளி விபரங்களின்படியும் ஒரு நாளைக்கு 2 ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரத்து 800 நோயாளிகள் என மதிப்பிடப்பட்டாலும், அந்த எண்ணிக்கை 4 ஆயிரம் ஆகக் கூட இருக்கலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ரி-5)


# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### தீர்க்க சுமங்கலி வரம் அருளும் வரலட்சுமி நோன்பு



பெண்கள் வரலட்சுமி விரதம் இருந்தால் அஷ்டலட்சுமிகளும் மகிழ்வார்கள். இதனால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். திருமணம் தோஷம் உள்ள கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவவும், செல்வங்கள் பெருகவும், கணவருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், குழந்தைகள் நலமுடன் வாழவும், சுமங்கலி பெண்கள் அனுஷ்டிப்பதே வரலட்சுமி நோன்பாகும். வரலட்சுமி விரதம், ஆவணி மாதம் வளர்பிறையில் வரும் கடைசி வெள்ளிக்கிழமையில் அனுஷ்டிக்கப்படுகிறது. சில ஆண்டுகளில் இந்த விரதம் ஆடி மாதத்திலும் வரும்.

**நோன்பு தோன்றிய கதை**

மகத நாட்டில் குஞ்சினாபுரம் என்ற ஊரில் சாருமதி என்ற பெண் வாழ்ந்து வந்தாள். இவள் தனது கணவன், மாமனார், மாமியார் ஆகியோரை சாதாரண மனிதர்கள் போல் கருதாமல், இறைவனாகவே கருதி அவர்களுக்கு பணிவிடை செய்து வந்தாள். அவளது மனப்பான்மை மகாலட்சுமிக்கு மகிழ்ச்சியை அளித்தது.

மகாலட்சுமி சாருமதியின் கனவில் வரலட்சுமியாக தோன்றி அருள் புரிந்தார். 'என்னை துதித்து வரலட்சுமி விரதம் மேற்கொள்பவர்களின் இல்லத்தில் நான் வசிப்பேன்' என்று அருளிய மகாலட்சுமி, சாருமதிக்கு வரலட்சுமி நோன்பு இருப்பதன் வழிமுறையைக் கூறி, அதை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும்படி கேட்டுக் கொண்டார். அதை அப்படியே செய்தாள் சாருமதி.

அவள் பெற்ற நன்மைகளை கண்ட பெண்கள், தாங்களும் மகாலட்சுமிக்காக விரதம் இருக்க தொடங்கினர். விரைவில் அந்த நாட்டு மக்கள் முழுவதும் விரதம் இருக்க தொடங்கினர். [illegible]

(தொடரும்)


# செய்தித்துளிகள்

## அதிகமான பயணிகளை ஏற்றியதால் வீதி அனுமதிப்பத்திரங்கள் இரத்து

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவல் நிலைக்கு மத்தியில் சுகாதார வழிமுறைகளை மீறி ஆசன எண்ணிக்கைக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்ற 68 பேருந்துகளின் வீதி அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனை தெரிவித்தார். மாகாணங்களுக்குள் பயணிக்கும் 18 பேருந்துகளின் வீதி அனுமதிப்பத்திரங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஆசன எண்ணிக்கைக்கு அதிகமான பயணிகளுடன் மாகாணங்களுக்கு இடையில் பயணித்த 50 பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார். (ரி-5)

## தனிமைப்படுத்தல் விதி மீறல்; 50,000 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 138 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். அதற்கமைய, கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இது வரையான காலப்பகுதியினுள் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 942 ஆக அதிகரித்துள்ளது. அவ்வாறே இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 50 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ரி-5)

## 16 பால் ஆமைகளுடன் ஒருவர் கைது



(அம்பாறை)

அம்பாறை அக்கரைப்பற்று வாவியில் இருந்து சட்டவிரோதமாக ஆமைகளை பிடித்து இறைச்சியாக்கி நீண்டகாலமாக விற்பனை செய்து வந்த அக்கரைப்பற்று கண்ணகிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று 16 பால் ஆமைகளை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற போது கைது செய்யப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். (ரி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 140 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 160 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 240 |
| தக்காளி | 120 | 110 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 180 | 160 | 180 | 200 |
| கரட் | 160 | 160 | 180 | 200 |
| பூசணி | 100 | 80 | 80 | 120 |
| புடோல் | 100 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 280 | 240 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 350 | 280 | 320 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 170 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 160 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 240 | 240 |
| பீற்றூட் | 120 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 220 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 160 | 200 | 200 | 160 |
| போஞ்சி | 200 | 280 | 280 | 360 |
| கத்தரிதம்புள்ள | 150 | 140 | 160 | 140 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 60 | 50 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 40-70 |
| இராசவள்ளி | -- | -- | 400 | -- |
| வெங்காயப்பூ | 200 | 140 | 160 | 320 |
| முள்ளங்கி | 120 | 80 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 50 | 100 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீராதி வீரன்



"நீ அப்படிச் செய்தால் நானும் அப்படியே செய்து காட்டுகிறேன். சிறிது நேரம் பொறுத்திரு. நான் கஞ்சி சமைத்து எடுத்து வருகிறேன்," என்ற பூதம் சமையல் அறைக்குச் சென்றது.

உடனே அவன் பெரிய சாக்குப் பையை எடுத்தான். அதைத் தன் வயிற்றில் கட்டிக் கொண்டான்.

அதன் வாய்ப் பகுதி தன் தொண்டைக்கு நேராக இருக்கு மாறு வைத்தான். உள்ளே சாக்கு இருப்பது தெரியாத வண்ணம் மேலே சட்டையை அணிந்து கொண்டான்.

"கஞ்சி வைத்தாயிற்று. வா குடிக்கலாம்," என்று அவனை அழைத்தது பூதம். கஞ்சிப் பாத்திரத்தைத் தூக்கினான். தன் வாய்க்கு அருகே வைத்தான். குடிப்பது போல நடித்த அவன் கஞ்சியைச் சாக்குப் பைக்குள் ஊற்றினான்.

சூழ்ச்சியை அறியாத பூதம் அவன் குடிப்பதாகவே நினைத்தது. ஏப்பம் விட்ட அவன், "என் பங்குக் கஞ்சியைக் குடித்து விட்டேன்.

வயிற்றைக் கிழித்துக் காட்டப் போகிறேன். அங்கே அரிசிக் கஞ்சி அப்படியே இருக்கும். நான் சிறிதும் மெல்லவில்லை என்பதை நீ பார்க்கலாம்," என்றான்.

கத்தி ஒன்றை எடுத்தான் அவன். வயிற்றைக் கிழிப்பது போல நடித்து சாக்குப் பையைக் கிழித்தான். வயிற்றிலிருந்து கஞ்சி கீழே கொட்டியது.

அதைப் பார்த்த முட்டாள் பூதம் "உன்னைப் போல நானும் கஞ்சியை மெல்லாமல் குடிக்கிறேன். பிறகு வயிற்றைக் கிழித்துக் காட்டுகிறேன்,"என்றது.

கஞ்சி இருந்த பாத்திரத்தை எடுத்தது. அப்படியே முழுவதையும் குடித்தது.

"நானும் உன்னைப் போல எதையும் மெல்லவில்லை. நீயே பார்," என்ற அது கத்தியை எடுத்து, தன் வயிற்றில் குத்திக் கிழித்தது.

வயிறு கிழிந்ததால் ரத்தம் கொட்டியது. துடிதுடித்து அங்கேயே இறந்தது பூதம்.

வெற்றி வீரனாக திரும்பிய பால்பாண்டியை, அரசன் சிறப்பாக வரவேற்றான்.

ஒரு நல்ல நாளில் பால்பாண்டிக்கும், இளவரசிக்கும் திருமணம் நடந்தது.

(முற்றும்)

# மகாபாரதம்




பின் துரியோதனின் மாளிகையைப் பீமனுக்கு வழங்கினார். துச்சாதனனின் மாளிகையை அருச்சுனனுக்கு அளித்தார்.

துர்மர்ஷனுடைய மாளிகையை நகுலனுக்கும், துர்முகனுடைய மாளிகையைச் சகாதேவனுக்கும் கொடுத்தார்.

"என் அன்புத் தம்பிகளே! என் பொருட்டு நீங்கள் இதுவரை எல்லையற்ற துன்பத்தை ஏற்றீர். இனி இன்பத்துடன் வாழ்வீர்" என்றார்.

பின் ,குடிமக்களை அழைத்து அறநெறியில் உறுதியாய் இருக்கு மாறு கூறினார். அரசாட்சியை ஏற்ற தருமர் பின் கண்ணன் உறையும் இடம் சென்றார். கண்ணன் அப்போது தியானத்தில் இருந்தார்.

அது கண்டு வியந்த தருமர் "மூவுலக நாயகனே உலக உயிர் அனைத்தும் உம்மை நோக்கி தியானம் செய்கையில் நீர் மட்டும் யாரை எண்ணி தியானிக்கிறீர்" என வினவினார்.

"யுதிஷ்டிரா! அம்புப் படுக்கையில் இருக்கும் பீஷ்மர் என்னை நோக்கி தியானம் செய்து கொண்டிருக்கிறார். ஆகவே, எனது உள்ளமும் அவரிடம் சென்றிருந்தது. எவரது நாணொலி கேட்டு இந்திரனும் நடுங்குவானோ அந்த பீஷ்மரிடம் என் மனம் சென்றிருந்தது. முன்னொரு சமயம் மூன்று கன்னியர் பொருட்டு அரசர்கள் அனைவரையும் வீழ்த்தி வெற்றி கண்ட அந்தப் பீஷ்மரிடம் மனம் சென்றிருந்தது. தெய்வ மங்கை கங்கையின் மைந்தரும் வசிஷ்டரின் சீடருமான பீஷ்மரிடம் என் மனம் சென்றிருந்தது.

எவர் வேத வேதாந்தங்களையும் முக்காலங்களையும் உணர்ந்தவரோ அந்தப் பீஷ்மரிடம் என் மனம் சென்றிருந்தது.

எவர் தேவகுருவிடம் அரச நீதியையும், பிரம புத்திரரான சனத்குமாரரிடம் ஆத்ம வித்தைகளையும், மார்க்கண்டேயரிடம் சந்நியாச தர்மத்தையும் அறிந்தவரோ, அந்தப் பீஷ்மரிடம் என் மனம் சென்றிருந்தது.

எவர் தனது மரணத்தைத் தடுத்து நிறுத்தும் தவ மேன்மை மிக்கவரோ, எவர் புதல்வனின்றியும் புண்ணியம் பெறத் தக்கவரோ அந்தப் பீஷ்மரிடம் என் மனம் சென்றிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.
– டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நல்லூர்க் கந்தனின் திருவிழா தொடங்குகின்ற இவ்வேளையில்...

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவம் நாளை 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இது கொரோனாக் காலம் என்பதால் வரையறுக்கப்பட்ட அடியார்களுடன் திருவிழாவை நடத்துவதென்ற தீர்மானம் உள்ளது.

முன்பெல்லாம் நல்லூர்க் கந்தனின் கொடியேற்றம் என்றால், யாழ்ப்பாணம் விழாக் கோலம் பூணும்.

புலம்பெயர் உறவுகள் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கத் தாயகம் வந்து தங்குவர்.

உபவாசம், அடியழிப்பு, பாதயாத்திரை, காவடி, கரகம் என நேர்த்திக்கடன்கள் நடந்தாகும்.

கூடவே கூட்டுப்பிரார்த்தனை, பிரசங்கம், இசை அர்ப்பணம், இயல் இசை நாடக அரங்குகள் என எங்கும் களைகட்டும்.

அன்னதானம், தாகசாந்தி என்ற தர்மப் பணிகளும் தாராளமாய் நடந்தாகும்.

அதிலும் அதிகாலைப் பொழுதில் நல்லூர்க் கந்தனின் பெருவீதி முழுவதிலும் இளைஞர்கள் அரோகரா கோசத்துடன் அங்கப் பிரதட்சணம் செய்கின்ற பக்தி நிலை கண்டு பரவசப்படாதவர் யார் உளர்.

இவ்வாறெல்லாம் நடந்தாகும்போது, அலங்காரக் கந்தன் வெளிவீதி வருகின்ற காட்சியைக் காண அடியார் கூட்டம் அலைமோதும்.

ஈசானத்தில் திருவாசகத் தேன் இசைக்க, சிவப்பரம்பொருளின் நெற்றியினின்றும் தெறித்த பொறிகள்போல தீப்பந்தங்கள் வீதி வரும் காட்சி என எல்லாம் சேர்ந்து ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம் என்று மனம் உணரும்.

என்ன செய்வது, நல்லூர்க் கந்தன் நினைத்தால் மட்டுமே அவையெல்லாம் இம்முறையும் நடந்தாகும் என்றளவில், அவன் திருவருளை வேண்டும் அதேநேரம், கொரோனாக் காலத்தில் நடக்கின்ற நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் சிறப்பாக அமைய அடியார்கள் மிகுந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பது தான் இங்கு முக்கியமானது.

அதாவது கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான அத்தனை நடைமுறைகளையும் அடியார்கள் பின்பற்றுவதில் உச்சமான பங்களிப்பை ஆற்ற வேண்டும்.

அதேநேரம் யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் உள்ளிட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் காவல்துறையினர் அடியார்களை ஒழுங்குபடுத்தும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும்.

அதாவது நல்லூர்த் திருவிழாக் காலங்களில் அடியார்கள் கொரோனாக் கட்டுப்பாட்டு முறைமைகளைச் சரியாகப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டு எந்த வகையிலும் ஏற்படாதவாறு, நல்லூர் முருகனின் மகோற்சவத்துக்கு வருகின்ற அடியார்களை ஒழுங்குபடுத்தும் பணியை சம்பந்தப்பட்ட தரப்பினர் செய்தாக வேண்டும்.

இவையாவற்றுக்கும் மேலாக, திருவிழாவுக்கு வருகின்ற அடியார்களிடம் அன்ரிஜன் சோதனை, பிசிஆர் பரிசோதனை செய்கின்ற நடவடிக்கைகள் எதுவும் இருக்கக்கூடாது.

ஆம், ஆடி அமாவாசை விரத நாளில் கீரிமலையில் பிதிர்க்கடன் செய்யச் சென்றவர்களுக்கு அன்ரிஜன் சோதனை செய்யும் அளவில் சுகாதாரத் தரப்பு சைவ மக்களை மோசமாக நடத்தியது. இந்த இழி செயல் சைவ மக்களின் மனங்களை புண்ணாக்கியது.

ஆக, அது போன்ற சிறுமைத்தனங்களை நல்லூரில் செய்யாமல் இருப்பதை யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதாரப் பரிசோதர்கள் உறுதி செய்ய வேண்டும் என்பதும் நம் தாழ்மையான கோரிக்கை.

### கர்ப்பவதியான மனைவியை பார்ப்பதற்காக

## வைத்தியசாலையிலிருந்து தொற்றாளர் தப்பியோட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 33 வயதுடைய கோவிட் தொற்றாளர் நேற்று வைத்தியசாலையிலிருந்து தப்பியோடியுள்ளார்.

நெளுக்குளம் சாம்பல்தோட்டம் பகுதியில் வசித்து வந்த நிலையில் குறித்த நபர் கோவிட் தொற்றாளராக இனங்காணப்பட்டதையடுத்து, வவுனியா வைத்தியசாலையின் கோவிட் சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அவரது மனைவி தற்போது நிறைமாத கர்ப்பவதியாக காணப்படுகின்றார். இந் நிலையிலேயே குறித்த கோவிட் தொற்றாளர் மதியம் மனைவியைப் பார்ப்பதற்காக அவரது வீட்டிற்கு தப்பியோடியுள்ளார். அதன் பின்னர் மனைவி அவரை மீண்டும் வைத்தியசாலைக்கு அழைத்து வந்து ஒப்படைத்துள்ளார்.

மனைவியை விட்டு பிரிந்து வாழ முடியாத நிலையில் அவர் வைத்தியசாலையிலிருந்து தப்பியோடியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது. (ம-3.250)

### கொரோனா அச்சுறுத்தல்

## வவுனியா பண்டாரிக்குளம் கிராம அலுவலகம் பூட்டு

(வவுனியா)

கொரோனா தொற்று அச்சம் காரணமாக வவுனியா பண்டாரிக்குளம் கிராம சேவையாளர் பிரிவு அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து கிராம சேவையாளர் அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அப்பகுதி கிராம சேவையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணிய அலுவலகத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் அவர்களின் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-3.250)

## கூரிய ஆயுதங்களுடன் யாழில் இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

ஆபத்தான கூரிய ஆயுதங்களை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை, முள்ளி என்ற இடத்தில் இருவரும் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டனர்.

அதே இடத்தைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் இருவரே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு வாள்கள் மற்றும் கஜேந்திரா வாள், கோடரி என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம-3.33)

## வவுனியாவில் பேருந்து சாரதிக்கு கொரோனா தொற்று

(வவுனியா)

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையில் கடமையாற்றும் சாரதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த சாரதிக்கு சுகாதாரப் பிரிவினரால் நேற்றைய தினம் அன்டியன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவருக்கு கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர் தனிமைப் படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை வவுனியா சாலையில் பணிபுரியும் ஏனைய ஊழியர்களிற்கு இன்றைய தினம் காலை பி.சி.ஆர் பரிசோதனை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3.299)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** புதுக்குளம், ஆண்டிய புளியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்



## பிரமாண்ட லிங்கம்

❖ பற்றினை விடுத்து, பானையில் இருக்கும் வெளி, பிரபஞ்ச வெளியோடு ஒன்றிணைய வேண்டும். அந்தப் பற்றென்பது மாயை வசப்பட்ட மனதின் செயற்கையான உற்பத்தியே.

❖ அந்தப் பற்று மறையவேண்டும். இப்போது அவனுக்குத் திருப்தியளிக்கின்ற மனிதத்துவமென்னும் தாழ்ந்த நிலையிலிருந்து அவன் தனது மெய்ந்நிலையாகிய மாதவத்துவத்துக்கு உயரவேண்டும். அந்தப் பணிக்குத்தான் உன்னை சாய் அழைக்கிறார். அதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன்.

❖ உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர் வீட்டில் தன் பேரனுடன் விளையாடும் போது குனிந்து தன் முதுகில் ஏற்றிக்கொண்டு அவன் டுர்ர்ர்... போ என்று அவன் கூறும்போது நான்கு கால்களால் தவழலாம். அதனால் நீதிபதி என்ற நிலையிலிருந்து அவர் தாழ்ந்து விடுவதுமில்லை. தன் நிலையை மறந்துவிடுவதுமில்லை. அதுபோலவே நீயும் எதற்காக வந்தோமென்ற உயர் இலட்சியத்தை மறந்துவிடக் கூடாது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள்

# உரிய பயன் கொண்டவை அல்ல

### திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

**உலகில் திடீரென கொவிட் தொற்று தீவிரமடைந்த நிலையில், கொவிட் தடுப்பூசிகள் அவசரமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனவே அவை உரிய பயன் கொண்டவை அல்ல என்று பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தட்டம்மை, போலியோ மற்றும் பெரியம்மை ஆகியவற்றுக்கு மருத்துவ நிபுணர்கள் தடுப்பூசிகளைத் தயாரிக்க குறைந்தது ஏழு ஆண்டுகள் பிடித்தன.

எனினும் கொவிட்டிற்கான தடுப்பூசிகள் அவசரமாக தயாரிக்கப்பட்டுள்ளன. மொடர்னா மற்றும் பைஸர் தடுப்பூசிகளை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் மரபணு மாற்றப்படும் ஒரு நவீன தொழில்நுட்பமாகும்.

இது மரபணு மாற்றப்பட்ட உணவை உற்பத்தி செய்வதைப் போன்றது. மரபணு மாற்றப்பட்ட உணவு ஐரோப்பாவில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் மொடர்னா மற்றும் பைஸர் போன்ற தடுப்பூசிகள் பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் சினோபார்ம், ஸ்புட்னிக் வி மற்றும் அஸ்ட்ராஜெனெகா ஆகியவை மிகவும் பயனுள்ளவை என்று கூற முடியும் எனவும் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (நி-5)

# திருகோணமலை துறைமுகம்

## அமெரிக்காவிற்கு வழங்கப்படவில்லை

### ஆதாரம் இருந்தால் காட்டுங்கள் என்கிறார் கம்மன்பில

(கொழும்பு)



திருகோணமலை துறைமுகம் மற்றும் திருகோணமலை எண்ணெய் குதங்களுக்கு சொந்தமான 33 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை அமெரிக்காவிற்கு வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு அடிப்படையற்றது என வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

திருகோணமலை துறைமுகம், எண்ணெய் குதங்களுக்கு சொந்தமான நிலப்பரப்பு ஒப்பந்த அடிப்படையில் அமெரிக்காவிற்கு வழங்க அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஊழல் எதிர்ப்புக் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் குறிப்பிட்டுள்ளார். முடிந்தால் அமைச்சரவை பத்திரத்தின் பிரதியை பகிரங்கப்படுத்த வேண்டும்.

2003 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில், திருகோணமலை எண்ணெய் குதங்கள் 35 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் 2038 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவடையும். நாம் தற்போது 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளோம்.

மேலும், போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# ஆசனத்தில் அமர்ந்தவாறே உயிரிழந்த பெண்

### பாணந்துறை பேருந்தில் சம்பவம்

(கொழும்பு)

பாணந்துறை பகுதியில் பேருந்தில் பயணம் செய்த வேளை பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இவர் பேருந்து ஆசனத்தில் அமர்ந்தவாறே உயிரிழந்ததாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆசனத்தில் அமர்ந்தவாறு நித்திரை கொள்ளும் விதமாக இருந்த பெண் மீது நடத்துநருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, குறித்த பெண்ணை எழுப்ப நடத்துநர் முயற்சித்துள்ளார்.

குறித்த பெண்ணிடமிருந்து எந்தவித அசைவுகளையும் அவதானிக்காத நடத்துநர், பெண்ணை அதே பேருந்தில் பாணந்துறை வைத்தியசாலைக்கு அழைத்து வந்து அனுமதித்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், வைத்தியசாலையில் அனுமதித்த தருணத்தில், அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பெண் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்காத நிலையில், பாணந்துறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-5)

# கொரோனா தீவிரமடைய அரசாங்கமே முழுக்காரணம்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை, கொவிட்-19 தொற்றினால் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை தொடர்பில் வெளியிடப்படும் தகவல்களில் சந்தேகம் நிலவுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த சுகாதார தரப்பினர் குறிப்பிடும் ஆலோசனைகளை புறக்கணித்து அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் தற்போது தீவிரமடைந்துள்ளதற்கு அரசாங்கத்தின் அலட்சியப் போக்கே முக்கிய காரணமாக உள்ளது.

அரசியல் தேவைக்கமைய சுகாதார பாதுகாப்பு கட்டுப்பாடுகள் சந்தர்ப்பத்திற்கேற்ப தளர்த்தப்பட்டன.

இதன் விளைவை நாட்டு மக்கள் இன்று எதிர்கொள்கின்றனர்.

நாட்டு மக்களின் உயிரை பாதுகாக்க அரசாங்கம் சுகாதாரத் தரப்பினரது கருத்துக்களுக்கும் தீர்மானங்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை அரசியல் கோணத்திலிருந்து இல்லாதொழிக்க முடியாது என அவர் தெரிவித்தார். (நி-5)

# அம்பாறையிலும் கொரோனா சடலங்களை அடக்கம் செய்ய நடவடிக்கை

(அம்பாறை)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் இறக்காமத்தில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய புதிய நிலப் பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.


புதிய நிலம் மூன்று ஏக்கர் பரப்பளவில் உள்ளதாகவும் அதன்படி, அப்பகுதியில் 2 ஆயிரத்து 400 சடலங்களை அடக்கம் செய்ய முடியுமென அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இந்த நிலம் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய ஏற்ற இடம் என்று அம்பாறை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளதாகவும் அதற்கு தேவையான பரிந்துரைகளைச் செய்ய தொழில்நுட்ப குழு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓட்டமாவடியில் இதுவரையில் கொரோனா சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கழற்றியெறிந்த கவசங்களால் ஆபத்து

(வாழைச்சேனை)



கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வரும் நிலையில், சிலர் தொற்றுக்களை பரவச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் பகுதிக்குச் செல்லும் மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியோரத்தில், பயன்படுத்திய கொரோனா பாதுகாப்பு ஆடைகளும், முகக்கவசங்களும் முறையற்ற விதத்தில் இவ்வாறு வீசப்பட்டுள்ளன. இதனால் அவ்வீதியை பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், குறித்த பகுதியில் கூடுதலான கால்நடைகள் மேய்ந்து திரிவதால் ஒரு வேளை முகக்கவசங்களிலுள்ள கிருமித் தொற்றுக்கள் கால்நடைகளையும் கொரோனா பாதித்து விடுமோ என்று, கால்நடைகள் உரிமையாளர்கள் அச்சம் கொள்கின்றனர்.

இவ்வாறு குறித்த இடத்தில் மொத்தமாக முகக்கவசங்களை வீசிச் சென்றுள்ளமை சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 வயது...

டுள்ளது.

குறித்த பெண் நேற்று முன்தினம் இரவு தனது வீட்டில் உறங்கச் சென்றுள்ளார்.

எனினும் நேற்றுக் காலை முதல் குறித்த பெண்ணை காணாத நிலையில் அவரது உறவினர்கள் தேடியுள்ளனர்.

இதன்போது அருகில் உள்ள கிணற்றில் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த மோகன் திலக்சனா (வயது-19) என்ற பெண்ணே மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## மேலும் 124 பேர்...

பாளர் நேற்று இரவு உறுதிப்படுத்தினார்.

இவற்றுடன் நாட்டில் பதிவான மொத்த கொரோனா மரணங்கள் 5,464 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் தொடர்ந்து நேற்று 3ஆவது நாளாகவும் 100க்கும் மேற்பட்ட கோவிட் இறப்புகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் 75 பேரும் பெண்கள் 49 பேரும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் நேற்று +2,890 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

நோயால் நேற்று மரணமடைந்துள்ளார்.

குறித்த பெண் பிரசவத்திற்காக வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிசேரியன் மூலம் குழந்தை பிறந்துள்ளது.

ஆயினும் குறித்த குழந்தை கொரோனாவால் சில நாட் களின் பின்னர் மரணமடைந்துள்ளது. இதேவேளை குறித்த குழந்தையின் தாய்க்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார். (ம-3,299)

## கொடிகாமத்தில்...

உள்ளதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீடு நோக்கி நடந்து சென்ற அவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிப் பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கோவிட்-19 நோய்த் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் கொடிகாமம் மீசாலை வடக்கைச் சேர்ந்த பூபாலசிங்கம் தனலட்சுமி (வயது-65) என்ற 4 பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார். (ம-3,33)

## வல்வெட்டித்துறை...

ஜன் பரிசோதனையில் கோவிட்-19 நோய்த் தொற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டது.

அதனால் வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் நேற்று முற்பகல் உயிரிழந்துள்ளார். (ம-3,18,33,60)

## வட மாகாண...

சுகாதார தரப்பினருடன் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டிருந்த நிலையிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்ற நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில்வட மாகாண சுகாதார உயரதிகாரிகள் பலர் பங்குபற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,33)

## யாழில் கொரோ...

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த 68 வயதுடைய ஆண் ஒருவரும் சுன்னாகம் ஊரெழுவைச் சேர்ந்த 56 வயதுடைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சிற்றூழியர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கொடிகாமத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவரும் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம-3,33)

## அலங்கார...

றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

கொரோனா இடர்காலம் என்பதனால் மட்டுப்படுத்தப்பட்டுள்ள அடியார்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர்க் கந்தனை தரிசிக்க வரும் அடியார்கள் கோவிட் தடுப்பூசி செலுத்திய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டியது அவசியம் என மாநகர சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மனிதாபிமான...

சூழலில், மக்கள் தற்போது தங்களை கொரோனாவிலிருந்து காப்பாற்றுவதை விட, அரசாங்கத்திடமிருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் அந்தளவிற்கு மனிதாபிமானமற்றதாக மாறிவிட்டதாகவும் மக்களின் எதிர்ப்பாளராக அரசாங்கம் மாறிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாவையும் பொருட்களின் விலையையும் கட்டுப்படுத்தும் திறனை அரசாங்கம் இழந்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ராஜ...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் சொல்வதையும் வழங்கும் ஆலோசனைகளையும் ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்வதில்லை. நாடு இன்று பாரிய நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. இந் நிலைமை குறித்து ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

உரிய இடத்துக்குப் பொருத்தமான நபர் சேவையில் அமர்த்தப்படாமை தற் போதைய நெருக்கடிகளுக்கு ஒரு காரணியாகும்.

கொரோனா வைரஸ் தொடர்பில் முறையான கொள்கைத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை. எல்லை மீறிய அதிகாரங்கள் பலவீனமான ஆட்சி அதிகாரத்தை உருவாக்கும் என்று குறிப்பிடப்படுவது இன்று உண்மையாகியுள்ளது என்றார். (ம-3)

## யாழ்...

லக்கள் மேற் கொள்ளவுள்ளதாகவும் அதனால் இன்று ஊழியர்களை பணிக்கு சமுகமளிக்காது வீடுகளில் பாதுகாப்பாக இருக்குமாறும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் த.சிவரூபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கல்விசாரா ஊழியர்களுக்கு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெரும் அபாயமாக மாறிவரும் கொரோனா பெருந்தொற்று சூழலில் யாழ். பல்கலைக்கழக பணியாளர்களினை பெருந்தொற்று அபாயத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக பணியாளர்கள் பணிக்கு வருதல் தொடர்பில் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரதும் கருத்துக்கள் அறியப்பட்டு அதனடிப்படையில் இன்று வியாழக்கிழமை, பணியாளர்கள் அனைவரும் பணியிடங்களிற்குச் செல்லாமல் பாதுகாப்பாக வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## யாழ் - 97...

பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடம் ஆகிய இரண்டு ஆய்வுகூடங்களில் மட்டும் 590 பேருக்கு பிசிஆர் பரி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ம-3)

தன நிதானய
திகதி - 2021.08.11
சீட்டிழுப்பு இலக்கம் - 563
S 06 22 23 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 11.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2828
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 01 68 69 76

மஹஜன சம்பத
திகதி 2021/08/11
சீட்டிழுப்பு இலக்கம் 4533
N 5 7 5 8 9 0

மெகா பவர்
திகதி 11/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0881
Y 03 26 49 68 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1134
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 4 4 7 2 6 9

சீட்டிழுப்பு வாரம் 087
சீட்டிழுப்பு திகதி 11.08.2021
வெற்றி இலக்கங்கள் 08 17 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,710,680/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1336
சீட்டிழுப்பு திகதி: 11.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,134,798
வெற்றி இலக்கங்கள் 06 09 48 71 S

சனிதா
சீட்டிழுப்பு இல: 3671
சீட்டிழுப்பு திகதி: 11.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,031,220.40
வெற்றி இலக்கங்கள் 04 21 23 31 V

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,739,766.80/=
திகதி: 11.08.2021
வெற்றி வாரம்: 3222
வெற்றி இலக்கங்கள் 15 28 40 53 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,105,200/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1510
சீட்டிழுப்பு திகதி 11/08/2021
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் R 14 43 68 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,010,832/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1770
சீட்டிழுப்பு திகதி 11.08.2021
வெற்றி இலக்கங்கள் 05 12 16 70 S
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 26,410,272
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடர்களிடம் ஆட்சி அதிகாரம் ராஜபக்ஷர்களின் கொத்தணி என்பதே பொருந்தும் - சம்பிக்க

(கொழும்பு)

நாட்டு மக்கள் இனிவரும் காலங்களில் ஒரு சில ஊடகங்களின் போலியான பிரசாரத்திற்கு ஏமாந்து மூடர்களிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்காமலிருக்க வேண்டும். கோவிட் வைரஸ் பரவலுக்கு பல்வேறு மாறுபட்ட பெயர்களை சூட்டுவது பொருத்தமற்றது. ராஜபக்ஷர்களின் கொத்தணி என்று பெயர் சூட்டினால் பொருத்தமாக இருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளை புறக்கணித்து ராஜபக்ஷர்கள் தான்தோன்றித்தனமாக செயற்பட்டதன் விளைவை நாட்டு மக்கள் இன்று எதிர்க்கொள்கிறார்கள். ஜனவரி மாதமளவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை கருத்திற் கொண்டே அரசாங்கம் முறையான சுகாதார வழிமுறைகளை செயற்படுத்தாமல் தடுப்பூசி செலுத்தும் பணிகளை துரிதப்படுத்துகிறது.

மிகுதியாகியுள்ள நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டுமாயின் ஊடக கண்காட்சியை நடத்தும் கோவிட்-19 வைரஸ் ஒழிப்பு செயலணியை நீக்கி வைத்திய நிபுணர்களின் தலைமையிலான குழுவை நியமித்து வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும்முறையான நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். இல்லாவிடின் நாட்டு மக்கள் அனைவரும் உயிரிழக்க நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (ம-03)

# வீட்டிற்கே சென்று தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை இராணுவம் நாட்டின் தேசிய தடுப்பூசி வழங்கல் திட்டத்தை முன்னோக்கி வெற்றிகரமாக கொண்டு செல்கிறது.

அதற்கமைய சமூகத்தில் முதியவர்கள், நோயப் பாதிப்புக்குளுக்குள்ளானவர்கள், ஊனமுற்றவர்கள், பலவீனமானவர்களுக்கு கோவிட் - 19 தடுப்பூசி வழங்கலின்போது முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் கோவிட் - 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் எண்ணக்கருவிற்கு அமைவாக மேல் மாகாணத்தை அடிப்படையாக கொண்டு நடமாடும் தடுப்பூசி வழங்கும் சேவை இன்று வியாழக்கிழமை (12) இராணுவத்தினால் ஆரம்பிக்கப்படுகின்றது.

அதன்படி ஆரம்பகட்டமாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் அவசியம் உடையவர்கள் இலங்கை இராணுவ வைத்திய படையினருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதற்காக 10 சிறப்பு நடமாடும் வாகனங்கள் தயார் நிலையில் காணப்படுவதுடன், இராணுவ நோய் தடுப்பு மற்றும் மனநல மருத்துவ பணிப்பகத்தினை 1906 அல்லது 0112860002 ஆகிய இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொண்ட பின்னர் தடுப்பூசிகள் வீட்டிற்கே வந்து வழங்கப்படும் என கோவிட் - 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது. (ம-03)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் எழுமாற்றுப் பரிசோதனை

## சுகாதார பரிசோதகர், பொலிஸார் உட்பட எட்டு பேருக்கு தொற்றுறுதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று புதன்கிழமை சிகிச்சைபெற வந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் சிறுவர்கள், சுகாதார பரிசோதகர், பொலிஸார் உட்பட எட்டுப் பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், வெளிமாவட்டத்தில் உள்ள தையல் நிலையத்தில் கடமையாற்றும் பெண், அவரது இரு குழந்தைகள் மற்றும் அவரது தாயார் ஆகியோர் உட்பட எட்டு பேர் தொற்றுக்கு இலக்காகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான பொலிஸார் விடுமுறையில் வீடு சென்று வந்து தனிமைப்படுத்தலில் இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-03,30)

# "எப்சிலான்" வைரஸ் திரிபு பாகிஸ்தானில் அடையாளம்

பாகிஸ்தானில் இருந்து "எப்சிலான்" என்ற உருமாற்ற கோவிட்-19 திரிபு பதிவாகியுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு, பாகிஸ்தானின் லாகூரில் உள்ள சுகாதார அதிகாரிகள், கோவிட்டால் பாதிக்கப்பட்டவர்களிடையே 'எப்சிலான்' வைரஸ் அடையாளம் காணப்பட்டதை வெளிப்படுத்தினர். (ம-03)

## கொரோனாவுக்கு பலியான

# கர்ப்பவதிகளின் எண்ணிக்கை 19 ஆக உயர்வடைவு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா 3ஆவது அலைத் தொற்றின் பின்னர் கர்ப்பவதித்தாய்மார் கொரோனாத் தொற்றுக் இலக்காகி வருவதும், உயிரிழந்து வருவதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் மேலும் சில கர்ப்பவதித் தாய்மார் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து இதுவரை கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்த கர்ப்பவதித் தாய்மாரின் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்துள்ளதாக குடும்பநல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார். (ம-03)

தேவை TOWN ACC LOTO
SUZUKI ALTO
WAGON - R- STRINGRAY
விற்பதற்கு வைத்திருப்போர் தொடர்புகொள்ளவும். (7617)
077 230 6653

CHEM - BIO இமாதம்
Home Visit/ English, Tamil
10 வருட MCQ விளக்கவுரை
CHEM - Singam 076 056 5786
MCQ - Essay செய்வித்தல்(PP) (7619)
BIO - வித்யா 077 665 5290

வேலை வாய்ப்பு
நீங்கள் வேலை தேடும் ஆர்வம் உள்ளவரா?
உங்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.
திறமை இருந்தால் நீங்களும் முகாமையாளர் ஆகலாம்.
அதிகுறைந்த திறமை - O/L, A/L
❖ Supervisor ❖ Administrative Crew
❖ Assistant Manager ❖ Sales Excutive
தங்குமிட வசதிகள் இலவசம்.
மருத்துவ வசதி இலவசம். (7624)
077 413 1866 | 077 800 5570
077 695 3242

மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு
2009 Hero Honda Super Spelender/
2005 Hero Honda Passion Plus
ஆகிய மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. (7623)
077 898 9691







கனடா-STUDENT VISA
A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2509)
IELTS இலவசமாக கற்பிக்கப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
0777-068-777

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
0768226240 DHL (C-2438)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.